வியாழக்கிழமை 30 ஜீன் 2022

# தமிழருவி

அருவி: 02 | சாரல்: 24

தமிழின் தலைநிமிர்வு



## தண்ணீரே கண்ணீருக்கு காரணமானது!

## கடந்து போன சூறாவளியும் கண்திறந்த சுடலை ஞானமும்

## வீணாகும் நேரத்தில் வெண்டி நடுவோம்!

## பரிதவிக்கும் பாலைவனக் கப்பல்கள்!

## சிறுபிள்ளை வேளாண்மை கதிரின்றி வீடுவந்தது!

## இன்று நினைவில் நிழலாடும் தமிழ்ச் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன்

# எரிபோருள் கோரி ரஷ்ய ஜனாதிபதிக்கு கோட்டாபய ராஜபக்ச கடிதம்



## மொஸ்கோ செல்லவும் ஜனாதிபதி உத்தேசம்



இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை நிவர்த்தி செய்யும் பொருட்டு இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சரஷ்யஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்த விடயம் தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதியுடன் தொலைபேசியில் கலந்துரையாடவும் ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளதுடன் மொஸ்கோவுக்கு விஜயம் செய்யவும் உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தற்போது உக்கிரமான எரிபொருள் நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது என்பதுடன் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்பட்டும் வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இலங்கையின் பிரதிநிதிகள் ரஷ்யா சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒரு பில்லியன் அமெரிக்க டோலர் கடன் கையிருப்பை வழங்க சர்வதேச நாணய நிதியம் தயார்




இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்கடொலர்கடன்கையிருப்பை வழங்க சர்வதேச நாணய நிதியம் தயாராகவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அரசாங்க உள்ளகத் தகவல்களை மேற்கோள்காட்டி அரச ஊடகம் ஒன்று வெளியிட்ட தகவலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கேற்ப இந்த இக்கட்டான சூழ் நிலையில் இலங்கைக்கு உதவ எதிர்பார்த்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

கடனாக அன்றி கையிருப்பாக அந்த நிதி வைப்புச் செய்யப்படவுள்ளதோடு இதன் மூலம் வெறுமையாக உள்ள இலங்கை கையிருப்பு ஒரு பில்லியன் டொலர்களாக உயர இருக்கிறது.

இதனூடாக வேறு நாடுகளின் உதவிகளைப் பெற வாய்ப்பாக அமையுமென அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின்தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அண்மையில் நாட்டுக்கு வந்தது.

இந்தக் குழு அரச தலைவர் கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமதர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகள், எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்தனர்.

ஒரு வார காலம் நாட்டில் தங்கியிருக்கும் இப்பிரதிநிதிகள் குழு நிறைவேற்றுப் பணிக்குழாம் மட்டத்திலான உடன்படிக்கையை எட்டுவது தொடர்பாகவும் மற்றும் கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பிலும் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.



கோட்டா-ரணில் சாபத்துக்கு முற்றுப்புள்ளி வைப்போம் எனும் தொனிப்பொருளில் ஐக்கியமக்கள் சக்தி மற்றும் ஏனய சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் இணைந்து இன்று கோட்டை ரயில் நிலைய வளாகத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட போது.

# புலம்பெயர் தமிழர்களாலேயே இலங்கையர்களுக்கு விடிவு கிடைக்கும்

## நோர்வேயில் சாணக்கியன் தெரிவிப்பு



ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் வெட்கமில்லை, இன்றும் பதவியில் உள்ளார்கள். இலங்கையின் தற்போதைய நிலைமை வேதனைக்குரியதாகவுள்ளது. இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தினை தமிழ் தேசிய கூட்டமைப்பினரால் மேம்படுத்த முடியும்.

ஜனாதிபதி உட்பட பிரதமர் பதவி விலக வேண்டும். இல்லாவிடின் தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வையே கோருகிறோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் ஒஸ்லோவில் உள்ள இலங்கையர்களை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், பல்வேறு காலக்கட்டங்களில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த அல்லது வெளியேற்றப்பட்ட புலம்பெயர் இலங்கையர்களை நோர்வேயில் சந்திக்கிறேன்.

கடந்த இருவாரங்களில் சுவிஸ்லாந்தில் லீடிங் வித் பாஸ் என்ற தலைப்பில் கடந்த காலங்களை எவ்வாறு முகம் கொடுப்பது, யுத்த காலத்திலும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நாடு என்ற ரீதியில் எவ்வாறு முகம் கொடுப்பது.

இதிலிருந்து எவ்வாறு வெளியேவருவது, முன்னேறி செல்வது தொடர்பில் அவதானம் செலுத்த சுவிஷ்லாந்து நகரில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டேன்.

சுவிஸ்லாந்துக்கு அண்மைய நாடாக நோர்வே உள்ளதால் இங்கு வந்துள்ளேன். வருகை தந்துள்ள அனைவருக்கும் முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விசேடமாக தற்போது இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியினை எதிர்க்கொண்டுள்ளது. அதிகாரிகளும் பொது மக்களும், பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக்கொள்கிறார்கள்.

ஊழல் மோசடி, இலஞ்சம் ஆகியவை தற்போதைய நிலைமைக்கு காரணம் என குறிப்பிடுகிறார்கள். இல்லை நாட்டில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு வழங்காமலிருப்பது தற்போதைய பிரச்சினைக்கு பிரதான காரணியாக உள்ளது.

1948ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து தமிழ், முஸ்லிம, சிங்களம் என இலங்கையர்கள் வேறுப்படுத்தப்படுத்தப்பட்டதால் தற்போதைய பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தினால் தமிழர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அதனை தொடர்ந்து 30 வருடகால சிவில் யுத்தம் தோற்றம் பெற்றது. கடன் பெற்று யுத்தத்திற்கு அதிக நிதி செலவிடப்பட்டது. 2009ஆம் ஆண்டு காலத்திற்கு பிறகு பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி செலவிடப்பட்டுள்ளது.

துரதிஷ்டவசமாக கோஹோம் கோட்டா, நோடீல்கம என குறிப்பிட நேரிட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிற்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் வெட்கமில்லை, இன்றும் பதவியில் இருக்கிறார்கள்.

73 வருடகால தீர்க்கப்படாத தமிழர்களின் உரிமைசார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கினால் உலகளாவிய ரீதியில் உள்ள 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வார்கள்.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும், பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கினால் 13 இலட்சம் புலம் பெயர் தமிழர்களின் முதலீடுகளை மேற்கொள்ள தயாராகவுள்ளனர். இலங்கையின் தற்போதைய நிலைமை கவலைக்குரியது.

இலங்கையர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ளமையினை காண்கையில் வேதனையடைகிறோம். ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மக்களின் நிலை தொடர்பில் அக்கறையில்லை.

இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பினால் முடியும். இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டால் அதன் தாக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மக்களையும் செல்வாக்கு செலுத்தும்.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும் பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை பெற்றுக் கொள்ள வேண்டும். பிளவுப்படாத இலங்கைக்குள் தீர்வினையே கோருகிறோம். எனக் குறிப்பிட்டுள்ளார்.

## உஉ ஆவது திருத்தம் வர்த்தமானியில்

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலம் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வௌியிடப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த திருத்தச் சட்டமூலத்திற்கு கடந்ததினம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

# வவுனியாவை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் அகதிகளாக தனுஷ்கோடி வருகை



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை வவுனியா மாவட்டத்தில் இருந்து ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் இன்று வியாழக்கிழமை (30) காலை அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

இலங்கை தமிழர்களை மீட்ட மரைன் போலீசார் ராமேஸ்வரம் மரைன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்கு பின்னர் 4 பேரையும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்படுவார்கள்.

-வவுனியாவில் இருந்து மன்னாரிற்கு வந்து மன்னாரில் இருந்தே படகு மூலம் தனுஷ்கோடியை வந்தடைந்ததாக அவர்கள் தெரிவித்தனர். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தமது உறவுகள் இந்தியாவில் வசித்து வருகின்றமையினால் அவர்களுடன் அவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காக தாம் படகு மூலம் வந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தற்போது வரை இலங்கை தமிழர்கள் 96 பேர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்
# ஒரு மாதத்தில் 20 கொலைகள்

இலங்கையில் அண்மைக்காலமாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த மே 30 ஆம் திகதி முதல் நேற்று (ஜூன் 29) வரை மாத்திரம் 20 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்தச் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர். மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இது வரை நான்கு சந்தேகநபர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர். சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், அது சம்பந்தமான வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றும் கொழும்பில் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அலசல் அமசவல்லி

**செய்தி:-**

'வாக்கு கொடுத்தபடி எதிர்க்கட்சிதலைவர் சஜித் 3 நாடுகளிடம் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வாரானால் நான் பதவி துறப்பேன்' .

**அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ**

**ஆளாளுக்கு இப்படியே மாறி மாறி வாயால வடை சுடுங்க. கடைசில மக்களுக்கு வாய்க்கரிசி மட்டுமே எஞ்சும்.**

## சுப்பர் டீசல் இல்லாமல் நோயாளர் காவுவண்டிகள் ஸ்தம்பிதம்

மத்திய சுகாதார அமைச்சினால் 46 பென்ஸ் மற்றும் போட் ரக நோயாளர் காவு வண்டிகள் வடமாகாணத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு உற்பத்தியாளர்களால் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் படி சுப்பர் டீசல் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இவற்றிற்கான சுப்பர் டீசலைப்பெறுவதில் கடுமையான சிரமங்களை சுகாதார திணைக்களம் எதிர்கொண்டுள்ளது.

இதனால் சில மாவட்டங்களில் குறித்த நோயாளர் காவுவண்டிகள் தற்காலிகமாக பாவனையில் இருந்து விலக்கப்பட்ட நிலையில் இருப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்ட சுகாதார பணிப்பாளர் தமது மாவட்ட அரச அதிபர் ஊடாக சுப்பர் டீசலினைப் பெறுவதற்கு விசேட பொறிமுறையினை ஏற்படுத்தியுள்ளார். அதனால் முல்லைத்தீவில் சுப்பர் டீசலில் இயங்கும் நோயாளர் காவு வண்டிகள் தொடர்ந்து பாவனையில் உள்ளன.

இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பிரிவினர் சுப்பர் டீசலில் இயக்க வேண்டிய நோயாளர் காவு வண்டிகளை சாதாரண டீசலில் இயக்கும் முடிவினை தன்னிச்சையாக எடுத்துள்ளனர்.

இதனால் குறித்த நோயாளர் காவு வண்டிகளின் நீடித்த இயங்கு நிலை பாதிக்கப்படும் சூழ் நிலை உருவாகியுள்ளது.

இதனால் பெறுமதிவாய்ந்த நோயாளர் காவுவண்டிகள் செயலிழக்கும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளதாக சுகாதாரப் பணியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## இன்று நள்ளிரவு முதல் பேருந்து கட்டணம் 22 சதவீதத்தால் உயர்வு

### குறைந்த கட்டணம் 40 ரூபாவானது!



இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஆகக்குறைந்து பேருந்து கட்டணம் 32 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய கட்டணங்கள் 22 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பேருந்து தொழிற்சங்கங்கள் கோரிய, 40 ரூபா ஆகக்குறைந்த கட்டணம் மற்றும் 30 சதவீத பேருந்து கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட பேருந்து கட்டண திருத்தம் தொடர்பான பரிந்துரையை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சிடம் நேற்று சமர்ப்பித்திருந்தது.

எவ்வாறியினும், போக்குவரத்து அமைச்சின் முன்மொழிவுக்கமைய, 22 சதவீதத்தினால் பேருந்து கட்டணங்களை அதிகரிக்கவும், குறைந்த கட்டணத்தை 40 ரூபாவாக அதிகரிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## பயணிகள் வருகையில் வீழ்ச்சி: வியாபாரிகள் கடும் பாதிப்பு திருக்கோணேச்சரம் பகுதியும் வெறிச்சோடியது

எரிபொருள் இன்மையால் திருமலை திருக்கோணேச்சரம் ஆலய வெளிப்பகுதி வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேச்சரம் ஆலயத்திற்கு அதிகளவான மக்கள் சென்று வழிபடுவதுடன், சுற்றுலா பிரயாணிகளும் அங்கு அதிகளவில் சென்று வருகின்றமையானது வழக்கமானது.

இந்த நிலையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக அங்கு மக்கள் செல்வது மிகக்குறைவாக காணப்படுகின்றது. இதனால் கோவில் வணக்க பகுதிக்கு வெளியே காணப்படும் வர்த்தக நிலையங்கள் பல பூட்டப்பட்டு காணப்படுகின்றன.

வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் பலர் அனுராதபுரம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். இவ்வாறான பாதிப்பு நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சியினால் வர்த்தகங்கள், சுயதொழில் முயற்சியாளர்கள், சுற்றுலா துறையினர் என பல்வேறு தரப்பினர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

## இன்றும், நாளையும் ஆசிரியர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில்

**(பைஷல் இஸ்மாயில்)**

எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ள வழி செய்தல் மற்றும் கிழக்கு மாகாணத்திற்கென தனியான பாடசாலை அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அம்பாறை மாவட்ட ஆசிரியர்களால் முன்னெடுக்கப்படும் பாடசாலை பகிஷ்கரிப்பு போராட்டம் இன்றும், நாளையும் 30 மற்றும் 01 ஆம் திகதிகளில் இடம்பெறும் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெஸ்மி மூஸா தெரிவித்தார்.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி மூஸா ஊடகங்களுக்கு (29) கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்ந்தும் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த பாடசாலை பகிஷ்கரிப்பு தொடர்பான அறிவிப்பை கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளருக்கு சங்கம் அறிவித்திருப்பதாகவும், அவர்களின் அறிவித்தல் கடிதத்தில் எரிபொருள் பிரச்சினையினை மையமாகக் கொண்டு ஜூலை 10 ஆம் திகதி வரை பாடசாலைகளை



மூடுமாறு கல்வியமைச்சு அறிவித்துள்ளதனைத் சுட்டிக்காட்டியுள்ளதாவும் தெரிவித்தார்.

இக்காலப்பகுதிக்குள் ஆசிரியர்களுக்கான சொந்த விடுமுறை தொடர்பிலும் தெளிவான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளை நடத்துமாறு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பினால் மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்கள் அதனை மேற்கொண்ட நிலையில் சில வலயங்களில் பாடசாலை மூடல் தொடர்பான அறிவிப்பு ஆசிரியர்களுக்கிடையே பல்வேறு கேள்விகளை எழுப்பி வருகின்றது.

இதனடிப்படையில் தொழிற்சங்கம் என்ற ரீதியில் ஆசிரியர்களால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளை நாம் செவிமடுக்க வேண்டியுள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள வலயங்களிலும் வெளிப்பிரதேச ஆசிரியர்கள் செல்லாமையினால் பாடசாலை நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைத்துள்ளன. எரிபொருள் பிரச்சினை என்பது ஒரு வலயத்திற்கானது மாத்திரமல்ல என்பதனைத் எல்லோரும் அறிவார்கள்.

எனவே, எரிபொருள் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமொன்று உருவாகும் வரை கல்வியமைச்சின் அறிவித்தலினை மாகாணத்திற்கு அறிவிக்க வேண்டும். இதனை வலியுறுத்தி ஆசிரியர்கள் (30.06.2022 முதல் 01.07.2022) வரை பாடசாலை பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இதற்கான தீர்வு எட்டவில்லையாயின் இதனை மேலும் தொடர வாய்ப்புள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மிக முக்கியமாக, ஆசிரியர்கள் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளவதற்கென தனியான வழிமுறையொன்றினை மாகாணக் கல்வி அமைச்சினூடாக கல்வியமைச்சு அறிவிப்புச் செய்தல், எரிபொருள் பிரச்சினை காரணமாக பாடசாலைகளை மூடும்போது கிழக்கு மாகாணத்திற்கென தனியான அறிவிப்பினை விடுக்காதிருத்தல்.

கல்வி அமைச்சு அறிவித்துள்ளது போல் ஜூலை 10 வரை மாகாணப் பாடசாலைகளை மூடுவதற்கான அறிவிப்பினை மேற்கொள்ளல், கிழக்கு மாகாணத்தில் தனித்தனி வலயங்களில் பாடசாலைகளை மூடுவதனை கைவிட்டு மாகாணத்திற்கென பொதுவான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல், அதிபர் மற்றும் அதிகாரிகளுக்கு தனியாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை நிறுத்தி அறிவித்தல்களை ஒருமுகப்படுத்தல், கைவிரல் அடையாளம் இடும் இயந்திரப் பாவனையினை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்துதல் போன்ற கோரிக்கைகளையும் முன்வைக்கின்றோம் என்றார்.

## ரஷ்யாவுடன் எரிபொருள் பேச்சுவார்த்தைக்கு சம்பந்தமில்லாத குழு அனுப்பப்பட்டுள்ளது

### உதய கம்மன் பில குற்றச்சாட்டு

ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அனுப்பப்பட்ட தூதுக்குழுவின் பிரகாரம் ரஷ்யா புறக்கணிப்பதாகவே தோன்றுவதாக முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



எரிபொருள் கிடைப்பது குறித்து ஆலோசிக்க எரிசக்தி அமைச்சர் குழுவை அனுப்ப வேண்டும் என்றும், அதற்கு தலைமை தாங்குவது எரிசக்தி அமைச்சரே தவிர, கல்வி அமைச்சர் அல்ல என்றும் அவர் கூறினார்.

ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இந்த நாட்களில் எரிபொருள் சலுகையை எதிர்பார்த்து கட்டாருக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

## தமிழ் ஒலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

# இரவல் புடவைக்காரி இருக்கவிடமாட்டாள்

**இலங்கையில்** அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஞானசார தேரர் தலைமையிலான 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி நேற்று பல்வேறு பரிந்துரைகள் கொண்ட ஆவணம் ஒன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

தன்பாலின உறவுக்கு அனுமதி, புர்காவுக்கு தடை, யுத்த குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டோருக்கான விடுதலை,ஹலாலுக்கு தனிப்பிரிவு, சிறைச்சாலைகளில் மறுசீரமைப்பு விசேட தேவையுடையோரின் தேவைகளைப் பாதுகாத்தல், ஆதிவாசிகளின் கலாசாரம் பேணல், மதம் சார்ந்த கல்விகளுக்கான மட்டுப்படுத்தல்கள் மற்றும் மதமாற்றத்துக்கான தடை ஆகிய முக்கிய விடயங்களை இந்தப் பரிந்துரைகள் உள்ளடக்கியிருந்தாலும் அவை அரசியல் மற்றும் சட்டநுணுக்கங்கள் தொடர்பானவை. தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடித்தீர்வுகள் எதுவும் இங்கு பரிந்துரைக்கப்படவில்லை.


அவ்வாறாயின் அவசரத்தில் அள்ளித்தெளித்த கோலமாக இந்தப் பரிந்துரைகள் எதற்காக ?யாருக்காக?

இதில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் பௌத்த மதத்தின் செல்வாக்குக்கும் ஆளுகைக்கும் உட்பட்ட நாடொன்றில் அதுவும் பௌத்த துறவி ஒருவரை தலைவராக கொண்ட செயலணியில் இருந்து தோற்றம் பெற்றது அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

தற்போது நாட்டில் குற்றவியல் சட்டத்தின் 365 ம் பிரிவின் சரத்து ' அ' தன்பாலின உறவை குற்றமாக கருதுகையில் அதை நீக்குமாறு செயலணியின் பரிந்துரை கோரி நிற்கிறது. ஒருபாலின திருமணத்தை ஆதரிப்பதில் இருந்து செயலணி விலகியிருந்தாலும் இதனை மேற்குலகை திருப்திப்படுத்தும் ஒரு முயற்சியாக கருத வேண்டியுள்ளது.

இதேவேளை சுதேச சட்டங்களான தேசவழமைச் சட்டம், முஸ்லிம் சட்டம், மலைநாட்டு சட்டம் ஆகியவை நீக்கப்பட்டு நாடு பொதுச்சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்னும் பரிந்துரை யாருக்கு சாமரம் வீச?

**திருமண வீட்டில் இரவல் புடவை உடுத்த தந்தவள் நினைத்த இடத்தில் இருக்கவிடுவதில்லை. இது வீட்டிற்கு மட்டுமல்ல ஒரு நாட்டுக்கும் பொருந்தும்!**




நன்றி: themorning

# கடந்து போன சூறாவளியும் கண்திறந்த சுடலை ஞானமும்

**பவித்திரா**





**புதுடில்லியிலிருந்து** கடந்த வியாழக்கிழமை சூறாவளி விஜயமாக கொழும்பு வந்த நான்கு உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட இந்தியத் தூதுக்குழு கொடுத்த அதிர்ச்சி இலங்கை அரசை சுனாமியாகத் தாக்கியிருக்கின்றது. எரிபொருட்களை பெறுவதற்கு மற்றொரு கடனுதவியை இந்தியாவிடமிருந்து இலங்கை எதிர்பார்த்திருந்த நிலையில், அதற்குப் பதிலாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தியத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துங்கள் என இந்திய அதிகாரிகள் கடும் தொனியில் கூறிவிட்டு தாம் வந்த விமானத்திலேயே ஏறிச்சென்றுவிட்டார்கள்.

தனியான விமானத்தில் வந்து சுமார் மூன்று மணி நேரம் மட்டுமே கொழும்பில் தங்கியிருந்த இந்திய உயர் குழு, ஜனாதிபதியையும் பிரதமரையும் மட்டுமே சந்தித்தது. வருகைக்கு பின் வந்த மாற்றங்கள் எரிபொருள் இறக்குமதிக்கு இந்தியாவின் கடனுதவியை எதிர்பார்ப்பதற்கு முன்னதாக ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட இந்தியத் திட்டங்களை நிறைவேற்றுங்கள் என அவர்கள் கடுமையாகச் சொன்னதையடுத்தே பின்வரும் மூன்று விடயங்களை அவசரமாக இலங்கை செய்தது.

ஒன்று – ஜூலை 10 ஆம் திகதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் வழங்கப்படும் என அறிவித்தது. நகரப்புற பாடசாலைகளும் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டன. இதன்மூலம் இலங்கை பெருமளவுக்கு முடங்கிப்போயிருக்கின்றது. ஜூலை 10 என்ற காலை எல்லை மேலும் நீடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

இரண்டு – அமைச்சர் ஒருவரும் அதிகாரிகள் சிலரும் அவசரமாக ரஸ்யாவுக்கு அனுப்பப்பட்டார்கள். உக்ரேனுடனான போர் காரணமாக ரஸ்யா மீது விதிக்கப்பட்ட தடையால் ரஸ்யாவில் உற்பத்தியாகும் எரிபொருள் அந்த நாட்டில் பெருமளவுக்கு தேங்கிப்போயுள்ளது. குறைந்த விலைக்கு அவற்றை விலைபேசி வாங்குவதற்கே இரு அமைச்சர்களும் அவசரமாக அனுப்பப்பட்டுள்ளார்கள்.

மூன்று – இரண்டு அமைச்சர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். இதில் ஒருவர் முஸ்லிம் அமைச்சர். முஸ்லிம் அமைச்சர் ஒருவரையும் இணைத்து அனுப்பியதன் பின்னணி வாசகர்களுக்கு புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் இலங்கையில் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பது அனைவருக்கும் தெரியும். இந்த நிலையில், முஸ்லிம் அமைச்சர் ஒருவரையும் இணைத்து அனுப்பினால் தான் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறமுடியும் என கோட்டாபய அரசு கருதியிருக்கலாம். அதேவேளையில் கட்டாருக்கு தான் நேரடியாகச் செல்வதற்கு ஜனாதிபதியும் திட்டமிட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

> **இந்தியா கொடுத்த அதிர்ச்சியையடுத்தே இந்த நகர்வுகளை இலங்கை அரசு அவசரமாக முன்னெடுத்திருக்கின்றது. இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் கௌட்ரா தலைமையிலான இந்தியத் தூதுக்குழுவில் இந்திய நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளும் அடங்கியிருந்தனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இவர்கள் தனித்தனியாக சந்தித்துப் பேசினார்கள். இந்தியா முன்னெடுக்கக்கூடிய புதிய திட்டங்கள் தொடர்பாகவும் இவர்கள் பேசியுள்ளார்கள்.**

இந்தியா கொடுத்த அதிர்ச்சியையடுத்தே இந்த நகர்வுகளை இலங்கை அரசு அவசரமாக முன்னெடுத்திருக்கின்றது. இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் கௌட்ரா தலைமையிலான இந்தியத் தூதுக்குழுவில் இந்திய நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளும் அடங்கியிருந்தனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இவர்கள் தனித்தனியாக சந்தித்துப் பேசினார்கள். இந்தியா முன்னெடுக்கக்கூடிய புதிய திட்டங்கள் தொடர்பாகவும் இவர்கள் பேசியுள்ளார்கள்.

எரிபொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மற்றொரு கடனை இந்தியாவிடம் கேட்பதற்கு இலங்கை தயாராக இருந்தது. ஆனால், அதற்கு இடமளிக்காமல் தமது தேவைகள் என்ன என்பதை மட்டும் சொல்லிவிட்டு இந்திய அதிகாரிகள் புறப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக இந்திய கடனுதவித்திட்டங்களின் மூலமாகவே இலங்கை தனக்குத் தேவையான எரிபொருட்களை வாங்கிவந்தது. ஆனால், இந்தியாவின் நலன்களைப் பேணும் திட்டங்கள் கிடப்பில் போட்டபடி உள்ளன. இந்தப்பின்னணியில் அதனை 'நினைவூட்டவே' தனி விமானத்தில் நான்கு உயர் அதிகாரிகளை புதுடில்லி அவசரமாக கொழும்புக்கு அனுப்பியது.

மற்றொரு எரிபொருள் கடனுக்காக இந்தியாவை எதிர்பார்ந்திருந்த கொழும்புக்கு இதன்மூலமாக தெளிவான செய்தி ஒன்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, இந்தியாவின் திட்டங்களை நிறைவேற்றாத நிலையில் மற்றொரு கடனுதவி கிடைக்கப்போவதில்லை என்பதுதான் அந்தச் செய்தி.

அந்தச் செய்தியைத் தொடர்ந்தே இலங்கை அமைச்சர்கள் ரஸ்யா, மத்திய கிழக்கு

மிகுதி 18 ஆம் பக்கத்தில்...

# உணவு தட்டுப்பாட்டால் உலகம் பேரழிவை சந்திக்கும்!
## அதன் பின்விளைவுகளில் இருந்து எந்த நாடும் தப்ப முடியாது

உணவு தட்டுப்பாட்டால் உலகம் பேரழிவை சந்திக்கும் என்றும் அதன் பின்விளைவுகளில் இருந்து எந்த நாடும் தப்ப முடியாது என்றும் ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டரஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜேர்மனி தலைநகர் பெர்லினில், பணக்கார மற்றும் வளரும் நாடுகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, பருவநிலை மாற்றம், கொரோனா ஆகியவை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பட்டினி பிரச்சினையை உருவாக்கின. அதனால் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். உக்ரைன் போர், அந்த நிலைமையை மேலும் மோசமடைய செய்துள்ளது.

ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க நாடுகளில் உரம், எரிபொருள் விலை உயர்வை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் திண்டாடுகிறார்கள். அந்த நாடுகளில் அறுவடை பாதிக்கப்படும்.

அதனால், இந்த ஆண்டு பல நாடுகளில் பஞ்சம் அறிவிக்கப்படும் அபாயம் உள்ளது.

அடுத்த ஆண்டு நிலைமை இன்னும் மோசமடையும். உணவு கிடைக்காத பிரச்சினை, உலக அளவில் உணவு தட்டுப்பாடாக மாறும். அது உலக அளவில் பேரழிவை ஏற்படுத்தும்.

எந்த நாடும் அதன் சமூக, பொருளாதார பின்விளைவுகளில் இருந்து தப்ப முடியாது.

எனவே, இதை சமாளிக்க ஐ.நா. அதிகாரிகள் ஒரு சமாதான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, உக்ரைன் நாடு, உணவு பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். ரஷ்யா எந்த கட்டுப்பாடும் இன்றி உணவு, உரம் ஆகியவற்றை உலக சந்தைக்கு கொண்டுவர முடியும்.

ஏழை நாடுகள் மீண்டுவர கடன் நிவாரணம் அளிக்கலாம். உலக உணவு சந்தையை ஸ்திரப்படுத்த தனியார்துறை உதவ வேண்டும் என்று தெரிவித்தார்.

### இந்தியாவில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கு புதிய வீடுகள்
# 317 கோடி ரூபாய் ஒதுக்கீடு
# இலங்கை தமிழர் மறுவாழ்வு



தூத்துக்குடி, விளாத்திகுளமருகே தாப்பாத்தி இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் மக்களுக்கு தமிழக அரசு சார்பில் விரைவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்போருடன் அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்துரையாடி, தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

தாளமுத்துநகர், மாசார்பட்டி, குளத்துவாய்பட்டியிலுள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களையும் ஆய்வு செய்தார். தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆலோசனைப்பட தமிழகம் முழுவதும் 106 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் மக்களுக்கு 317 கோடிரூபாவில் புதிய வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை அறிவித்தார்.

முதற்கட்டமாக தூத்துக்குடி மாவட்டம் தாப்பாத்தி முகாமிலுள்ள மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளன.

விளாத்திகுளம் அருகே இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் மக்களுக்கு தமிழக அரசு சார்பில் விரைவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# மூன்றாம் உலகப் போர் உருவாகுமா?
## நேட்டோவை எச்சரிக்கும் ரஷ்யா



கிரிமியா தீபகற்பத்தில் நேட்டோ உறுப்பு நாடுகளின் எந்த அத்துமீறலும் ரஷ்யாவின் மீதான போர் பிரகடனத்திற்கு சமம். அது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும் என்று ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ரஷ்யாவின் பாதுகாப்பு சபை துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வடேவ் (Dmitry Medvedev) எச்சரித்துள்ளார்.

எங்களைப் பொறுத்தவரை கிரிமியா ரஷ்யாவின் ஒரு பகுதியாகும். கிரிமியாவை ஆக்கிரமிக்கும் எந்தவொரு முயற்சியும் நம் நாட்டிற்கு எதிரான போர் பிரகடனமாகும் என்று மெட்வெடேவ் சர்வதேச செய்தித் தளம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

கிரிமியா தீபகற்பத்தில் நேட்டோ உறுப்பு நாடு ஒன்று அத்துமீறினால் அது நேட்டோ கூட்டணியுடனான மோதலாக மாறும். இது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும். இதனால் ஒரு முழுமையான பேரழிவு ஏற்படும் எனவும் டிமிட்ரி மெட்வடேவ் தெரிவித்தார்.

பின்லாந்தும் சுவிடனும் நேட்டோவில் இணைந்தால் ரஷ்யா தனது எல்லைகளை வலுப்படுத்தும். எந்தவொரு பதிலடி நடவடிக்கைகளுக்கும் தயாராக இருக்கும். அத்துடன் இஸ்கண்டர் ஹைப்பர்சொனிக் ஏவுகணைகளை (Iskander hypersonic missiles) பின்லாந்து, சுவிடன் எல்லைகளில் நிறுத்தும் நிலை ஏற்படுத் எனவும் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ரஷ்யாவின் பாதுகாப்பு சபை துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வடேவ் எச்சரித்தார்.

### பிரான்சில் கோவிட் 19 பரவல்:
# போதுமக்கள் முகக்கவசம் அணிய பரிந்துரை



செவ்வாய்க்கிழமை பிரதமர் Elisabeth Borne தெரிவிக்கையில், நெருக்கமான இடங்களில் முகக்கவசம் அணிவதை அவர் பரிந்துரை செய்வதாக குறிப்பிட்டார். குறிப்பாக பொது போக்குவரத்துக்களில் முகக்கவசம் அணிந்து பயணிகள் பயணிக்கவேண்டும் என அவர் கோரியுள்ளார். அதேவேளை, முகக்கவசம் அணிவது 'கட்டாயம்' இல்லை என்ற போதும், அது பொதுமக்களின் பொறுப்பாகும்! எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, இரண்டாம் கட்ட பூஸ்ட்டர் தடுப்பூசி (நான்காவது தடுப்பூசி) போடுவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. எளிதில் நோய்த்தொற்றுக்குள்ளாகும் நபர்களுக்கு இந்த இரண்டாவது பூஸ்ட்டர் தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது. இது தொடர்பான விபரங்கள் ஏற்புடையவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சரக்கு கோள்கலன் லோறிக்குள் இருந்து 46 பேர் சடலங்களாக மீட்பு!
## அமெரிக்காவில் அதிர்ச்சி சம்பவம்







சரக்கு கொள்கலன் லொறிக்குள் இருந்து 46 பேர் சடலங்களாக மீட்பு! அமெரிக்காவில் அதிர்ச்சி சம்பவம்.

அமெரிக்கா - டெக்சாஸ் மாகாணம், சான் அன்டோனியோவின் புறநகரில் கைவிடப்பட்ட சரக்கு கொள்கலன் லொறி ஒன்றுக்குள் இருந்து 46 பேர் சடலங்காக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் நுழைந்து வேறு இடத்திற்கு நகர முயன்றவர்கள் என நம்பப்படுகிறது. ஆட்கடத்தல்காரர்களால் இவர்கள் சரக்கு கொள்கலனில் ஏற்றி கடத்தப்பட்ட நிலையில் வெப்ப அதிர்ச்சி (Heat Stroke) மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொள்கலன் லொறிக்குள் இருந்த நான்கு குழந்தைகள் உட்பட 16 பேர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக சான் அன்டோனியோ தீயணைப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உயிர் பிழைத்தவர்கள் உடல்கள் மிகவும் சூடான நிலையில் இருந்தன. அவர்கள் வெப்ப அதிர்ச்சி (Heat Stroke) மற்றும் வெப்ப சோர்வு ஆகியவற்றால் அவதிப்பட்டனர் எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார். அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் இருந்து 250கி.மீ தொலைவிலுள்ள சான் அன்டோனியோ, ஆட்கடத்தல்காரர்களுக்கான முக்கியமான போக்குவரத்துப் பாதையாக உள்ளது.

ஆட்கடத்தல்காரர்கள், ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர் அமெரிக்க எல்லைக்குள் நுழைந்த பிறகு, அவர்களை தொலைதூரப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்ல இவ்வாறான சரக்கு கொள்கலன் லொறிகள் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளூர் நேரப்படி திங்கட்கிழமை மாலை சுமார் 6 மணியளவில் இறந்தவர்களைப் பற்றிய தகவலறிந்த கிடைத்தன. இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்ததாக சான் அன்டோனியோ தீயணைப்புப் பிரிவின் தலைவர் சார்லஸ் ஹூட் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஒரு லொரியைத் திறக்கும்போது அதற்குள் இத்தழன இறந்த உடல்களை பார்த்தது அதிர்ச்சியளித்தது என சார்லஸ் ஹூட் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சரக்கு கொள்கலன் லொறியில் சாரதி தப்பியோடியுள்ளார். லொறிக்குள் குளிரூட்டும் வசதியில்லை. அதற்குள் குடிநீர் கூட இருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தலைவாழை



# இளமையின் இரகசியம்

# இராசவள்ளிக்கிழங்கு!

**காய்கறிகள்**, பழங்கள் போலவே கிழங்கு வகைகளுக்கும் நம் உணவு வகைகளில் சிறப்பான இடமுண்டு.

பூமிக்கடியில் புதையலாய் பொதிந்து விளையும் கிழங்குகள் மகத்தான சத்துக்களை கொண்டுள்ளதோடு ஒரு சமச்சீரான உணவின் முக்கிய பங்களிப்பாகவும் இருக்கின்றன.

உணவே மருந்து என்பது ஆன்றோர் வாக்கு.

உடல் ஆரோக்கியம் பேணி காப்பதற்கும், நோய் வராமல் தடுப்பதற்கும், அந்தந்த சீசனில் கிடைக்கும் உணவுப் பொருட்களை சாப்பிட வேண்டும். ஏன் என்றால், அந்தந்த சீதோஷண நிலையோடு அவை தொடர்புடையவை. அதற்குரிய சீதோஷண நிலைக்கு தேவைப்படும் சக்தியை அந்த உணவு நமது உடலுக்கு தரும். அந்த வகையில் ஆனி, ஆடி மாதங்களில் அதிகம் கிடைக்கக் கூடிய இராசவள்ளிக் கிழங்கு உடலுக்கு ஊட்டம் தரும் ஒரு சிறந்த உணவாகும்.

இளமையுடன் இருக்க இராசவள்ளி கிழங்கை சாப்பிடுங்கள்.

இராசவள்ளி கிழங்கில் உடலுக்கு ஊட்டம் தரும் வைட்டமின்கள் மற்றும் தாது சத்துகள் நிறைந்திருக்கின்றன.

இதில் உள்ள சர்க்கரைச் சத்து மிகவும் தரமானது. ரத்தத்தில் சர்க்கரையின் அளவை மிக நிதானமாகவே அதிகரிப்பதால் சர்க்கரை நோயாளிகளும் மருத்துவரின் ஆலோசனைப் படி சாப்பிடலாம். இதனை சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற உணவாக சில ஆராய்சிகள் குறிப்பிடுகின்றன.

வேரில் சத்துக்களை சேமிக்கும் கிழங்கு வகை.

நம்முடைய அன்றாட உணவில் மண்ணுக்கு அடியில் விளையக் கூடிய கிழங்குகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தானியங்களுக்கு





அடுத்த படியாக கார்போஹைட்ரேட்களுக்கு ஆதாரமாக இவை விளங்குகின்றன. மேலும் உடலில் உள்ள சர்க்கரையின் அளவையும், மாவுப் பொருளின் அளவையும் சமநிலையில் வைப்பதில் உதவி புரிகின்றன. அரிசி மற்றும் கோதுமையின் மூலம்

கிடைக்கும் ஆற்றலுக்கு ஈடாக அவற்றின் எடையில் மூன்றில் ஒரு பகுதி எடையுள்ள கிழங்குகளிலிருந்து ஆற்றலை பெற முடியும். அந்த வரிசையில் நாம் உண்ணும் ஒவ்வொரு கிழங்கும் ஒவ்வொரு விதமான தனிச் சுவையும் சத்தும் மிக்கது. அந்த வரிசையில் இன்று ஊதா அழகி பற்றி அறிவோம்.

## இராசவள்ளி

ஊதா நிற அழகியான செவ்வள்ளி அல்லது இராசவள்ளிக் கிழங்கானது பூக்கும் தாவர வகையை சேர்ந்த கொடியாகும். இதன் முளையை நட்ட ஒரு மாதத்தில் முளைத்து வளர ஆரம்பிக்கும். இதன் இலைகள் வெற்றிலை போல தோற்றமுடையவை. இதன் தண்டும்

அழகிய ஊதா நிறத்தில் இருப்பதால் கொடியே அனைவரையும் கவரும். கொடிகள் வளர்ந்து வர பட்ட மரக் கொப்புகள் அல்லது மூங்கில் தட்டிகளை வைத்து படர விடுவார்கள்.

இரண்டு மாதத்தில் களைகளை பிடுங்கி மண் அணைத்து விட வேண்டும். இலைகள் மஞ்சள் நிறம் கலந்து பழுப்பு நிறமாக உதிரத் தொடங்கும் போது நிலத்தில் வெடிப்புகள் ஏற்படும். அப்போது அறுவடை செய்து கொள்ளலாம்.

இப்போது மாடித் தோட்டங்களில் நாட்டிக் கொள்வதானால், நவீனத்தில் பூச்சாடிகளில் வளர்த்து பல்கனிகளில் அழகுக்கு படர விடுவதுடன் கிழங்கும் பெறலாம்.

## ஆரோக்கிய நன்மை

இராசவள்ளிக் கிழங்கில் வைட்டமின் ‘சி’ அதிகம் உள்ளது. இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். உடலில் உள்ள செல்களுக்கும் புத்துணர்ச்சி கொடுக்கும். அதனால் இது இளமையை பாதுகாக்கும் உணவாக திகழ்கிறது. இதில் இருக்கும் மாக்னீசியம், பொட்டாசியம் போன்ற தாதுக்கள் ரத்த குழாய்கள் நன்கு சுருங்கி விரிய உதவுகிறது. இதன் மூலம் ரத்த அழுத்தம் சீராக இருக்கும். உடல் எடையை குறைக்க விரும்புகிறவர்களும் இதனை சாப்பிடலாம். கண் பார்வையை கூர்மையாக்கும்.



பிரமிளா
நாகேஸ்வரராஜா

இதனை சாப்பிட்டால் உடன் பசி அடங்கிய நிறைவு ஏற்படும், அதனால் விரத காலங்களில் இராசவள்ளி கிழங்கு சார்ந்த உணவுகளை சாப்பிடும் வழக்கம் உள்ளது. இந்த கிழங்கின் மாவும் சிறந்த உணவுப் பொருள் தான், அதில் பல விதமான பிஸ்கெட், கேக், ரொட்டிகள், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து மா என்பனவற்றை தயாரிக்கின்றனர். தமிழர்களின் உணவு முறை சற்று மாறுபட்டது.

சிலர் இக் கிழங்கை சீவி எடுத்து வாழைக்காய் பொரியல் போல செய்தும், அல்லது இராசவள்ளி கிழங்கை அவித்து மசித்து சீனி மற்றும் கெட்டியான தேங்காய் பால் விட்டு கொதிக்க வைத்து கெட்டியாவதற்கு முன் உழுந்துமா கலந்து கிளறி ஆறவிட்டு துண்டுகளாக வெட்டி கேசரி போல ஊதா நிற இனிப்பும் செய்வார்கள். சுவையான சிற்றுண்டிகள் மற்றும் இனிப்பு வகைகள் செய்வதற்கு ஏற்ற ஒரு கிழங்கு இது.

இது உங்களுக்கான இந்த வார இராசவள்ளி கிழங்கு சமையல்.

## இராசவள்ளி இனிப்பு செய்வதற்கு

**கால் கிலோ - இராசவள்ளி கிழங்கு**
**பழ கேக் துண்டு- 200-250 கிராம்**
**சீனி - இரண்டு மேசைக்கரண்டி**
**பிரெஷ் கிரீம் -ஒரு கப்**
**மில்க்மெயிட் - 200 கிராம்**
**பட்டர் - 50 கிராம்**
**பசும் பால் - முக்கால் லீட்டர்**
**பிடித்த பருப்பு வகை- ஒரு கைபிடி**

## செய்முறை

இராசவள்ளிக்கிழங்கை தோல் சீவி சிறு துண்டுகளாக வெட்டி தண்ணீர் விட்டு நன்கு அவித்து பட்டர் சேர்த்து கட்டியி'லாமல் மசிக்கவும். பாலுடன் சீனி சேர்த்து சுண்டக் காய்ச்சி அதனுடன் மில்க்மெயிட் சேர்த்து கலந்து, மசித்த இராசவள்ளியை சேர்த்து கடையவும். நீள கண்ணாடி பாத்திரத்தில் பழகேக்கினை சற்று தடிமனான நீள துண்டுகளாக வெட்டி அடுக்கி அதன் மீது இராசவள்ளி கலவையை ஊற்றி முந்திரிப்பருப்பை நொறுக்கிப் போட்டு மேலால் பிரெஷ் கீறீம் கொண்டு சதுர கோடுகளாக கீறி அலங்கரித்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்து ஜில்லென்று பரிமாறவும்.

இறக்குமதி உணவுகளை மறப்போம்.
சுதேச உணவுப் பழக்க வழக்கத்துக்கு
வழி வகுப்போம்.





ஜேம்ஸ் ஞானேந்திரன்

# தண்ணீரே கண்ணீருக்கு காரணமானது!

**பல்கிப் பெருகுவது குற்றமா?**
**குற்றம் போல்தான் தெரிகின்றது.**

ஐரோப்பாவில் யானைகள் இல்லை. ஆனால் ஆபிரி'க்க காடுகளிலோ பல்கிப் பெருகும் யானைகள், நாட்டுக்கும் காட்டுக்கும் பாரமாகி விட்டதில், அவற்றைக் குறைக்கும் நடவடிக்கைகளில் அரசுகள் காலத்திற்குக் காலம் ஈடுபடுவது உங்களுக்குத் தெரியும்.உகண்டா, ஸ்ம்பியா, தென் ஆபிரிக்கா போன்ற ஆபிரிக்க நாடுகளின் காடு கொள்ளாத் தொகை, ஒரு குறிப்பிட்ட தொகையை அழிக்குமளவிற்கு அந்தந்த அரசுகளை நிர்ப்பந்தித்துள்ளது. உலக நாடுகளுக்கு தேவைப்படும் யானைகளின் ஒரு தொகை அனுப்பப்பட்டாலும்,மிகுதியை இவை அழித்து வருகின்றன..இயற்கையைச் சமன்படுத்த, சட்டரீதியாகவே செய்யப்படும் ஒரு கொடுமை இது.ஒரு மிருகத்தின் குடும்பம் தழைக்கின்றது என்பதற்காக, அவற்றின் ஒரு தொகையை அழிப்பதை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியவில்லை.. மனித குலம் பல்கிப் பெருகின்றது என்பதற்காக, காட்டு விலங்குகள், மனிதர்களை அழிப்பதை நாம் அனுமதிப்போமா?. இரண்டும் உயிர்கள்தானே?

## வேண்டப்படாத மிருகங்கள்

ஆபிரிக்காவில் யானைகள் போல, அவுஸ்திரேலியாவிலும், அங்குள்ள காட்டு ஒட்டகங்கள், நாட்டுக்கு ஒரு பீடையாகி, சுமையாகி, ஒரு பகுதி அழிக்கப்படுவது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்,

2019-20 காலகட்டத்தில்தான் இந்தச் செய்தி பத்திரிகைகளுக்கு பெரிதாகத் தீனி போட்டு, பரபரப்பாகப் பேசப்பட்டது.

எரிக்கும் வெயில். அதைத் தொடரும் கடும் வரட்சி.. மக்களின் குடிமனைகளுக்குள் புகுந்து தாக சாந்தி செய்ய முனைந்தன காட்டு ஒட்டகங்கள்...குறிப்பாக இந்த மிருகங்களால் பல தொல்லைகளுக்கு முகம் கொடுத்தவர்கள் இங்குள்ள ஆதிவாசிகள்! தெற்கு அவுஸ்திரேலியாவிலோ , நீரைத் தேடி, இந்த மிருகங்கள் தெருக்களில் நடமாடத் தொடங்கியிருந்தன பல கட்டடங்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. பல்கிப் பெருகி குடும்பமாக அலைந்து, மனிதர்களை வதை செய்யும் வேண்டாத மிருகங்களாகி விட்டன இந்தக் காட்டு ஒட்டகங்கள். இங்குள்ள பழங்குடி மக்களுக்கும், இங்கு வளரும் தாவரங்களுக்கும் அவசியப்படும் நீர்நிலைகளை இந்த ஒட்டகங்கள் பாழடித்தன என்பது இன்னொரு குற்றச்சாட்டு. இந்தக் காரணங்களுக்காக ஒட்டகங்கள் வேண்டப்படாத ஒரு பீடை என்று அறிவிக்கப்பட்டதுவே, இவற்றின் அழிவுக்கு ஒரு ஆரம்பமாயிற்று.




## இன அழிப்பு ஆரம்பம்

பல இலட்சங்களில் இருந்த மிருகங்கள் மீது, தொடர்ந்து 4 வருடங்கள், இனச் சுத்திகரிப்பு பணி தொடர்ந்ததால், இன்று தொகை பாதியளவாக குறைக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகின்றது. 2008 இல் இருந்ததை விட , பாதியளவு தொகைதான் இப்பொழுதுள்ளது என்கிறது ஒரு செய்தி! அவுஸ்திரேலியாவில் மத்திய பிரதேசத்தில்தான் ஏராளமான மிருகங்கள் காணப்பட்டு, அவற்றின் ஒரு பகுதி அழிக்கப்பட்டுள்ளது..

## கட்டாக்காலிகளாகிய வந்தேறு குடி

இந்த அவுஸ்திரேலிய காட்டு விலங்குகளை வந்தேறு குடி என்கிறார்கள். இவை இந்த மண்ணுக்கு சொந்தமானவை அல்ல ! (இலங்கைத் தமிழனுக்கும் இப்படித்தான் முத்திரை குத்தினார்கள்.) அப்படியானால் இவை எப்படி இங்கு வந்தன?

1840களில் பாலைவனப் போக்குவரத்திற்கு பொருத்தமான மிருகங்கள் என்று நினைத்து, இந்த மிருகங்களை அந்நிய மண்ணிலிருந்து, அவுஸ்திரேலிய மண்ணுக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். 1840இலிருந்து 1907வரை ஒரு ஏரி கொண்ட ஒட்டகங்கள், அவுஸ்திரேலியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. போக்குவரத்திற்கு-குறிப்பாக தங்கச் சுரங்கம் இருந்த பிராந்தியங்களில், பொதி சுமக்க ஒட்டகம் ஒரு சிறந்த வாகனமாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரு தனி ஆண் மிருகத்தால் 600கி.கிராம் எடை வரையிலான பொதியை சுமந்து செல்ல முடியும்.

ஆனால் காலப்போக்கில், பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற நியதிக்கேற்ப, கார்களின் வருகை, இந்த ஒட்டகங்களை வேண்டாப் பொருட்களாக்கி விட்டன. ரயில் வசதிகளும் வந்துவிட்டன.

வீடுகளில் வைத்து வளர்த்தவர்கள், சிலவற்றைக் கொன்றார்கள். பலர் இந்த மிருகங்களை கட்டாக்காலிகளாக திரியும்படி விரட்டிவிடும் நிலையும் உருவாகியது. இப்படியாகத்தான் இந்த ஒட்கங்கள் தொகை ஒரு கட்டத்தில், ஒரு மில்லியன் என்ற தொகையை எட்டியிருக்கின்றன.

## கொல்லப்பட்டவை எத்தனை?

மிகச் சரியான தொகையைத் தருவது சிரமம் என்று கூறும் ஓர் அதிகாரி, ஒட்டக ஒழிப்பு திட்



டத்தில் எடுக்கப்பட்ட தொகை 160,000 என்கிறார்.. வரட்சி, உணவுப் பற்றாக் குறை காரணமாக 100,000 ஒட்டகங்கள் சிம்ஸன் பாலைவனத்தில் இறந்திருக்கலாம் என்று கணிக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தில், ஒட்டகங்களால் பாதிக்கப்பட்ட, 3மில்லியன் சதுரக் கிலோமீற்றர் விஸ்தீரணமான நிலங்களை வைத்தே இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது. இங்கே மிருக வதை எதுவுமில்லை என்று கூறும் அதிகாரிகள், வருடத்திற்கு இந்த மிருகங்களின் தொகை 10 வீத அதிகரிப்பைக் காண்பதால், நாம் ஜாக்கிரதையாக இந்த விவகாரத்தைத் தொடர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவைகளை அடியோடு அழிப்பது என்பது முடியாத ஒன்று. வேண்டாத ஒன்று. முடிந்த அளவு இவற்றின் தொகையை எமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே எமது நோக்கம் என்கிறார் இந்த அதிகாரி.

## கங்காருகளை மிஞ்சும் ஒட்டகங்கள்

மேற்குப் பிராந்தியந்தான் தற்பொழுது அதிக அளவிலான ஒட்டகங்களைக் கொண்டுள்ளது என்கிறார்கள். இந் நாட்டின் முழுத் தொகையில் 45 வீதமான மிருகங்கள் இங்குதான் திரிகின்றன. அவுஸ்திரேலிய பாலைவனங்களில் ஒட்டகங்களின் தொகை கங்காருகளின் தொகையோடு ஒப்பிடும்போது 100-1 என்ற விகிதத்தில் காணப்படுகின்றது என்கிறார்கள்.

## வேறுபடும் மிருகங்கள் இவை..

ஏனைய மிருகங்களோடு ஒப்பிடும்போது, இவற்றின் சில உடல் அமைப்பு நம்மை வியக்க வைக்கும்.

★ஒரு வார காலத்திற்கு, உணவோ நீரோ நின்றி வாழும் திறன் இந்த ஒட்டகங்களுக்கு உண்டு.

★நாளொன்று 70கி.மீற்றர் தூரம் பயணம் செய்யக் கூடியவை.

★நோய்களால் இந்த மிருகங்கள் அழிவது குறைவு. இவைகளை வேட்டையாடும் மிருகங்களும் இல்லை.

★பட்டினி கிடப்பது குறைவு.. தாம் நிற்கும் இடத்தில் என்ன புல்பூண்டு கிடைக்கிறதோ அதையே உண்ணக்கூடியவை

★ஒரு நாளில் மூன்றரை கிலோ வரை தாவரங்கள், புற்களை உண்ணும். அவுஸ்திரேலிய தாவரபட்சணிகளில் அதிகம் உண்பது இவைதான்!

★தாகம் அதிகம் கொண்ட ஓர் ஒட்டகத்தால், 3 நிமிடங்களில் 200 லீற்றர் தண்ணீர் அருந்த முடியும்.

★இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை ஒரு குட்டி ஈனும் இந்த விலங்குகள் 50 வருடங்கள் வாழக் கூடியவை


★கூட்டமாக வாழும் இந்த ஒட்டகங்களில் பொதுவாக சிறிதும் பெரிதுமாக 30 இருக்கும். உணவும், நீரும் அரிதாகக் கிடைக்கும்கோது, இந்தக் கூட்டம் 400வரை பெரிதாகி விடும்.

எங்கோ நில் கொல்லாதே என்ற ஜீவகாருண்யக் குரலொன்று பலத்து ஒலிக்கின்றது.

கடிக்க வரும் பாம்மை அடிப்பதில்லையா? வீட்டை நாசமாக்கும் எலிகளைக் கொன்றொழிப்பதில்லையா? வேண்டாத இந்த விருந்தாளிகளை கொன்றழிக்கவில்லை. இவற்றின் தொகையைக் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருகிறோம். கொலைவெறியோடு நாம் இதைச் செய்யவில்லை. மனிதபிமானம்தான் முன்னிற்கிறது என்கிறார்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

கொல்லுவது நில்லாதோ மானிடனே
வெல்லுவது என்றும் நீதானே?





# பரிதவிக்கும் பாலைவனக் கப்பல்கள்!

**அவுஸ்திரேலியாவில் பல்கிப்பெருகிய ஒட்டகங்கள் தமது தாகம் தீர்க்க நீர்நிலைகளைத் தேடிய காரணத்தால் அவை பீடைகளாக கருதப்பட்டு 2019–2020 வரையிலான காலப்பகுதியில் பெருமளவில் அழிக்கப்பட்ட உண்மை சம்பவத்தின் தழுவலே இந்தக் கதையாகும்.**



சரிதா. ஜோ

**அந்த** பாலைவனத்தில் சுற்றித்திரிந்த லட்சக் கணக்கான ஒட்டகங்களில் சோபியாவும் ஒன்று.

சோபியா மிகச்சிறிய ஒட்டகம்.அதற்கு ஒரு வயதாகிறது. 'அப்பா எனக்குப் பசிக்குது' என்றது சோபியா. 'பொறு கண்ணா இன்னும் கொஞ்சம் தூரம் தான் டா கண்ணா' என்றது வயதான சோபியாவின் அப்பாவான கெத்தினி.

'நீ இப்படியேதான் நேற்றிலிருந்து கூறுகிறாய். சாப்பிட எதுவும் இல்லை என்றால் கூடப் பரவாயில்லை. தாகமாக இருக்கிறது தண்ணீராவது வேண்டும்' என்றது சோபியா.

'தண்ணீர், இந்தத் தண்ணீர் தான் நம்மை இந்த நிலைக்குத் தள்ளியுள்ளது' என்று சொல்லி முடிக்கும் முன் 'டொப் டொப் டொப் டொப்'என்ற சத்தம் கேட்க ஓடுங்க ஓடுங்க மறைவான இடத்துக்கு ஓடுங்க என்று ஒட்டகங்களின் சத்தம் கேட்டு அனைத்தும் சிதறி ஓடின. கூக்குரல் அழுகுரல் இவற்றிற்கு இடையே 'அப்பா அப்பா எனக்கு பயமாயிருக்கு. தினமும் இந்தச் சத்தம் கேட்டாலே படபடவென்று வருகிறது' என்று சோபியா கூறிக்கொண்டிருக்கும் போதே டொப் என்ற சத்தம் சோபியாவின் காலில் நிசப்தமானது.

'ஐயோ வலிக்குது அப்பா என் காலில் வந்து என்னமோ குத்திடுச்சு. வலி உயிர் போகுது' என்று துடித்தது சோபியா.

'சோபியா எனக்கு அடியில் வந்து படு கொஞ்சநேரம் பொறுத்துக் கொள்' என்றது கெத்தினி. இனி சோபியாவால் நகர முடியாது. சோபியாவை காப்பாற்ற வேண்டுமானால் நமது உயிரை பற்றிக் கவலைப்பட கூடாது. இந்த இடத்தைவிட்டு ஒரு அடி கூட இனி நான் நகர மாட்டேன் என்று அதே இடத்தில் அசையாமல் நின்றது கெத்தினி.

சோபியா தன் அப்பாவிற்கு அடியில் மெதுவாக அடிபட்ட கால்களை இழுத்து கொண்டு வந்து சோர்ந்து படுத்தது.

'அப்பா வலிக்குது'என்றது சோபியா.

சோபியாவை தன் வாலால் தடவிக் கொடுத்து. 'சிறிது நேரத்தில் சரியாகி விடும்' என்றது. மீண்டும் 'டொப்'பென்று சத்தம் கேட்கும்போதெல்லாம் கண்களை இறுக மூடி சத்தம் நின்ற பின்பு முழித்து பார்க்கும் நம்மீது விழவில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டது கெத்தினி. நீண்ட நேரத்துக்கு பின் அந்த சத்தம் நின்று போனது.

அப்பொழுதுதான் கெத்தினியின் நடுக்கமும் நின்றது. சோபிய இன்னும் நடுங்கி கொண்டு தான் இருந்தது. அந்த இடமே கத்தலும் கதறலுமாக இருந்தது. சுற்றிப் பார்த்தது கெத்தினி. ஆங்காங்கு குண்டடிபட்டு விழுந்துகிடந்த ஒட்டகங்களை பார்ப்பதற்கு மனதில் பயத்தை ஏற்படுத்தியது. நாம் எப்போது என்று நினைக்கும் போதே கெத்தினிக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. 'அப்பா ரொம்ப வலிக்குது' என்று முனகியபடியே சோபியா கெத்தினியைப் பார்த்தது. 'சோபி அழாதே. கொஞ்சம் தூரம் போகலாம். உனக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்' என்றது கெத்தினி.

'அப்பா என்னால் நடக்க முடியலப்பா. கால் ரொம்ப வலிக்குது பா' என்றது சோபியா.

அப்பொழுது சோபியாவின் நண்பர்கள் அவளைத் தூக்க உதவி செய்தார்கள். மெதுவாக வலியோடு எழுந்து நின்றது சோபியா. 'சோபி கவலப்படாத வாங்க உன்னைப் பிடித்துக் கொள்வோம்' என்று நண்பர்கள் கூறிய ஆறுதல் வார்த்தையால் மெதுவாக காலை



நொண்டிக் கொண்டே நடக்க ஆரம்பித்தது சோபியா.

மற்றவர்கள் எல்லாம் வேகமாக நடை போட சோபியாவும் அவளது அப்பாவும் நண்பர்களும் சோபியாவோடு மெதுவாக வந்தார்கள். 'அப்பா, அம்மா எங்கப்பா?'

'நானும் உன் அம்மாவைத்தான் தேடிக் கொண்டே இருக்கிறேன். அம்மா வழி தவறி எங்காவது ஒரு இடத்தில் இருப்பார். இத்தனை ஒட்டகங்களில் உங்க அம்மாவை எங்கே தேடுவது?' என்றது கெத்தினி.

'அப்பா, அம்மா உயிரோடு இருப்பார்களா?' என்று கேட்டது சோபியா.

'அம்மா கண்டிப்பாக உயிரோடு இருப்பார். நம்மை விட்டுப் போயிருக்க மாட்டார்' என்றது கெத்தினி.

'சரி அப்போ நாம இப்போ எங்கே போறோம்?'

'நாம் இந்தப் பாலைவனத்தைக் கடக்க வேண்டும். கடந்தால் ஒரு பெரிய காடு இருக்கும். அதற்குள் போனால் ஒருவேளை தப்பிக்கலாம்'

'நம்மை ஏனப்பா கொல்றாங்க?' 'இந்த நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அதற்கு நமது எண்ணிக்கை அதிகமாக இருப்பதும் ஒரு காரணமாம். நம்மை கொன்றால் நாம் குடிக்கும் தண்ணீர் அவர்களுக்கு உதவுமாம்' என்று கூறியது கெத்தினி.

'என்னப்பா சொல்றீங்க மற்ற விலங்குகளை விட நாம் குறைவாகத்தானே குடிப்போம்!' என்று கேட்டது சோபியா.

'ஆனால் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறோமே!' என்ற கெத்தினி. 'மற்ற விலங்குகளைக் கொல்லாமல் நம்மை ஏன் கொல்ல வேண்டும்?'

'நமது பூர்வீகம் இந்த நாடு அல்ல. நாம் வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டவர்கள். இதுவும் கூட ஒரு காரணமாக இருக்கலாம்'

'புரியலைங்க அப்பா'

'அவர்கள் நாட்டு விலங்கை ஏன் கொள்ள வேண்டும்? வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்ததுதானே இவற்றைக் கொன்றுவிடலாம்' என்று கூட இருக்கலாம்.

'எதற்காக நம்மை இங்கே கொண்டு வந்தார்கள்?' என்று கேட்டது சோபியா.



'முன்பெல்லாம் இந்த மாதிரி போக்குவரத்து சாதனங்கள் இல்லை. நாம்தான் பொருட்களையும் அவர்களையும் சுமந்தோம். நமது பெயரே பாலைவனக் கப்பல்' என்றது கெத்தினி.

'நாம் இப்போது அவர்களுக்கு தேவையில்லை. அதனால் கொள்கிறார்களா? ஒரு நேயம் இல்லை. நன்றியுணர்வு இல்லையே! என்றது சோபியா.

' அவர்கள் நாட்டு விலங்குகளை கொள்ளாமல் நம்மை கொள்கிறார்கள். இதில் கூட பாகுபாடு' என்பது கெத்தினி. 'நம் இனம் முழுவதையும் அழித்து விடுவார்களா அப்பா?'

'தெரியவில்லை. இப்போதைக்குப் பத்தாயிரம் என்று கூறியிருக்கிறார்களாம். நாமோ லட்சக் கணக்கில் இருக்கிறோம்' என்றது கெத்தினி துக்கம் கலந்த குரலில்.

'தண்ணி வேணும் அப்பா' என்று சோபியா



அனத்திக் கொண்டே இருந்தது. இருட்டத் தொடங்கியிருந்தது. எப்படியோ இன்று இரவு முழுவதும் நமது உயிர் நம்மிடத்தில் என்ற துக்கத்தின் வலியோடும் பசியோடும் தாகத்தோடும் அந்த இடத்தில் இருந்த அனைத்து ஒட்டகங்களும் உறங்க ஆரம்பித்தன. வலி தாங்காமல் சோபியா முனகிக் கொண்டே இருந்தாள். எந்த நேரத்தில் உறங்கி போனாது என்று சோபிக்கே தெரியவில்லை. அடுத்த நாள் நடக்க ஆரம்பித்தன. மீண்டும் 'டொப் டொப்' என சத்தம் ஆரம்பமானது.

'சோபி எனக்கு அடியில் வந்து படுத்துக் கொள்' என்று கூறியது கெத்தினி.

நீண்ட நேர அலறலுக்கும் கதறலுக்கும் பின் கால் வலியோடு இருந்த சோபி மீது சரிந்தது கெத்தினி. 'அப்பா அப்பா, அப்பா நீயுமா? எங்களைக் காப்பாற்ற யாருமே இல்லையா' என்று கத்திக் கொண்டே சென்றது கண்களில் நீர் வழிந்து ஓட.

## எரிபொருள் தட்டுப்பாடு:

# முடங்கும் அபாயத்தில் பத்திரிகை நிறுவனங்கள்



எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பத்திரிகைகள் முடங்கும் அபாயம் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக குறித்த பத்திரிகைகள் விநியோகத்தில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. பத்திரிக்கை விநியோக பணியில் ஈடுபடும் பணியாளர்கள் எரிபொருள் இன்மையால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதால் விநியோக பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் பத்திரிகைகள் முடக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

இது தொடர்பில் பத்திரிக்கை நிறுவன தலைவர்கள், ஆசிரியர் பீடத்தினர் வடமாகாண ஆளுநர், மாவட்ட செயலர் ஆகியோருடன் கலந்துரையாடிய போதிலும் சாதகமான பதில்கள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யாழில் மூன்று தொலைகாட்சி நிறுவனங்கள், வானொலி சேவைகள் என்பன உள்ளடங்கலாக 10 க்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்கள் உள்ளன.

அவற்றில் பணியாற்றும் ஊடக பணியாளர்கள் பலரும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# காணி பதிவு சேவைகள் எதிர்வரும் 10 நாட்களுக்கு திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் மாத்திரமே இடம்பெறும்!



பிரதேச செயலகங்கள் ஊடாக பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் காணி பதிவு சேவைகள் எதிர்வரும் 10 நாட்களுக்கு திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் மாத்திரமே இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினங்களில் காலை 08.30 முதல் பிற்பகல் 04.00 வரை இந்த சேவைகள் இடம்பெறவுள்ளதாகப் பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பதிவாளர் திணைக்களத்தின் பத்தரமுல்லை சுஹுருபாய வளாகத்தில் அமைந்துள்ள கிளை அலுவலகம் மற்றும் குருணாகலை, கண்டி, மாத்தறை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கிளை அலுவலகங்கள் உரித்தான பிரதேச செயலகங்களின் மாவட்ட பதிவாளர் பிரிவு வாரத்தின் 5 நாட்களுக்கு வழமை போல இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரை அனைத்து வாரங்களிலும் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் மாத்திரம் தபால் மற்றும் உப தபால் நிலையங்களைத் திறந்து வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 10 சதவீத தனியார் போக்குவரத்து பேருந்துகளே தற்போது சேவையில்



பேருந்துகளுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் இன்று 10 வீதமான பேருந்துகளே சேவையில் ஈடுபடுவதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நீண்ட தூர தனியார் பேருந்துகளின் சேவைகளும் இன்று குறைக்கப்பட்டுள்ளதாக மாகாணங்களுக்கு இடையிலான சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

எனினும் நாடளாவிய ரீதியில் போதியளவு இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் இயக்கப்படுவதாகவும் தமது பேருந்து சேவைகள் பாதிக்கப்படாது எனவும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரயில் சேவைகள் வழக்கமான கால அட்டவணையின் கீழ் இயங்கும் அதில் எந்தப் பாதிப்புக்களும் இருக்காது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனம்!

சுற்றுலாத்துறை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

1912 அல்லது 0112 437 759 என்ற தொலைபேசி இலக்கங்களில் விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்யத் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி!

விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்யத் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமான சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் எரிபொருள் களஞ்சியசாலை பொறுப்பாளர்களுக்கும் சிவில் விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிற்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

விமானங்களுக்கான எரிபொருளைக் கொண்டு வரும் செயற்பாட்டை இதுவரை இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனமே முன்னெடுத்திருந்தது. டொலர் நெருக்கடியின் காரணமாக விமானங்களுக்கான எரிபொருளைக் கொண்டு வருவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அதற்கமைய, தற்போதுள்ள சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு விமானங்களுக்கான எரிபொருளைக் கொண்டு வரும் செயற்பாட்டைத் தனியாருக்கு வழங்குவதாயின் அதற்கான முழுமையான ஆதரவை வழங்குவதாக எரிபொருள் களஞ்சியசாலை பொறுப்பாளர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதற்கு முழுமையான ஒத்துழைப்பை பெற்றுத்தருவதாக விமான சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அமைச்சர் உறுதியளித்துள்ளார்.



# சிறுபிள்ளை வேளாண்மை கதிரின்றி வீடுவந்தது!



பி.மாணிக்கவாசகம்

**இலங்கையின்** பொருளாதார நெருக்கடி வெறுமனே பொருளாதாரம் சார்ந்த பிரச்சினையாக மட்டும் அமையாமல் பல்வேறு வழிகளில் நெருக்கடிகளை உருவாக்கி இருக்கின்றது. பொருளாதாரப் பிரச்சினையினால் நாட்டை சீராக நிர்வகிக்க முடியாமல் அரசியல் நெருக்கடி உருவாகி இருக்கின்றது. ஆட்சியைக் கொண்டு செலுத்த முடியாத நிலைமை ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

கொரோனா நோய்ப்பேரிடரில் இருந்து பாதுகாப்பதற்காக நாட்டை முடக்கிய நிலைமை கடந்து எரிபொருள் இல்லாமையினால் அரச செயற்பாடுகளைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டிய நிலைமைக்கு நாட்டை ஆட்சியாளர்கள் தம்மை ஆளாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஜுலை மாதம் 10 ஆம் திகதி வரையில் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் என்றும் மக்கள் தேவைக்கு எரிபொருள் விநியோகம் செய்ய முடியாது என்றும் அரசு அறிவித்திருக்கின்றது.

ஆனால் பொருளாதாரப் பிரச்சினை மாத்திரமே நாட்டில் உள்ளது. அரசியல் நெருக்கடி ஏற்படவில்லை என்று ஆட்சியாளர்கள் சப்பைக் கட்டு கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். பொருளாதாரப் பிரச்சினை காரணமாக மூன்று நான்கு தடவைகள் அமைச்சரவையை மாற்றி அமைக்க வேண்டிய நிலைமை உருவாகியது. அரசியலில் பெரும்பான்மையினராகிய சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியைத் துறந்து ஓடி ஒழிக்க வேண்டியதாயிற்று.

அவருடைய இடத்தை இட்டு நிரப்புவதற்காக பிரதமர் பதவியை , ஏற்பதற்கு பொதுத்தேர்தலில் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள எதிரணியைச் சேர்ந்த எவருமே முன்வரவில்லை. இது ஆளும் தரப்பினர் மீது எதிர்க்கட்சியினர் கொண்டிருக்கின்ற அவநம்பிக்கையையே வெளிப்படுத்தி இருக்கின்றது. இந்த நிலையில் தான் தேர்தலில் கட்சியும் அதன் தலைவரும் தோல்வியுற்ற நிலையில், தேசியப் பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்திற்குள் பிரவேசம் செய்த ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பொதுஜன பெரமுன கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் கடந்த பொதுத் தேர்தலில் அமோக வெற்றி ஈட்டியது. நாட்டின் இரண்டு பிரதான தேசிய கட்சிகளில் ஒன்றாகிய ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றில் முதன் முறையாக ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியாமல் படுதோல்வியைச் சந்தித்தது. ஆனால் தேசிய ரீதியில் 2.15 வீதமாகிய 2 லட்சத்து 49 ஆயிரத்து 435 வாக்குகளைப் பெற்று ஒரேயொரு தேசியப் பட்டியல் உறுப்புரிமைக்குத் தகுதி பெற்றிருந்தது. அந்தத் தகுதியின் ஊடாகவே ஐக்கிய தேசிய கட்சி என்ற பெரும் கட்சியின் தலைவராகிய ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷவின் அழைப்பையேற்று பிரதமராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.



பொருளாதார நெருக்கடி காரணமாகவே ஆளும் கட்சியாகிய பொதுஜன பெரமுன செயல் வல்லமையைக் கொண்டவரும், மக்களின் நம்பிக்கையையும் வென்றெடுத்தவருமான ஒருவரைக் கட்சிக்குள் இருந்தே பிரதமராக்க முடியாமற் போய்விட்டது. இது ஜனாதிபதி கோத்தாபாய ராஜபகஷவின் தலைமையிலான அரசாங்கத்தின் தோல்வியுற்ற நிலைமையின் அடையாளம் – அரசியல் நெருக்கடியின் வெளிப்பாடே அல்லாமல் வேறொன்றுமில்லை.

## காற்றடித்து வீங்கிய பலூனாகப் பணவீக்கம்

நிறைவேற்று அதிகாரத்தில் அதிகாரங்கள் அனைத்தையும் மையப்படுத்திய எதேச்சதிகார, பிடிவாதத்துடன் கூடிய இராணுவ உளவியல் சார்ந்த – ஜனாதிபதி கோத்தாபாயவின் ஆட்சிப் போக்கே நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ச்சி அடைவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

முப்பது வருட கால யுத்தத்தை வெற்றி கொள்வதற்காகப் பெருமளவில் கடன் சுமைக்குள் நாட்டைத் தள்ளிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னைய ஆட்சியாளர்களின் பொருளாதாரப் போக்கும் ஏற்கனவே நாட்டின் பொருளாதாரத்தை நலிவடையச் செய்திருந்தது. நலிவுற்றிருந்த நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்க்கதரிசனத்துடன் தட்டி நிமிர்த்துவதற்கு ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ முயற்சிக்கவில்லை. அத்தகைய நெறிமுறையில் ஆட்சி நடத்துவதற்கு அவரது அரசியல் ஆலோசகர்கள் அவரை வழிநடத்தவுமில்லை.

அதுமட்டுமன்றி, இராணுவ வெற்றிவாத அரசியல் தன்முனைப்பு கொண்டிருந்த ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆட்சியில் ஊழல் மோசடிகளும், அரசியல் குற்றவியல் செயற்பாடுகளும் மலிந்திருந்தன. இவையும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்திருந்தன. பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியை உருவாக்கியதுடன் நிற்கவில்லை. அது பாரிய மனிதாபிமான நெருக்கடியாக உருவெடுத்து, மக்கள் மத்தியில் உளவியல் நெருக்கடியை விதைத்திருக்கின்றது.

டொலர்கள் கைவசம் இல்லாமல் திறைசேரி வெறுமையாகியுள்ளதுடன், பணவீக்கம் காற்றடித்த பலூனாக வரையறையின்றி அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அது எந்த வேளையிலும் வெடித்துச் சிதறலாம். இதனால் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் எகிறிக்கொண்டிருக்கின்றன. அரிசி, பருப்பு, பால்மா, சீனி, கோதுமை மா உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களினதும் விலைகள் பல மடங்காக அதிகரித்திருக்கின்றன. அதிக விலைகொடுத்தும் அவற்றை வாங்க முடியாத பற்றாக்குறைக்குள் மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

## உளவியல் நெருக்கீடுக்கு ஆளாக்கப்பட்டுள்ள மக்கள்

மக்களின் போக்குவரத்துக்கு அவசியமான டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடு, சமையல் எரிவாயு கிடைப்பதற்கு அரிதான பொருளாகிவிட்டது. இதனால் நாட்டின் பெரும்பலான சமையலறைகள் மாற்று வழிகளில் நிலைமையை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன. பல சமையலறைகளில் ஒன்று இரண்டு தடவைகள் மட்டுமே என்ற வகையில் சமையல்களின் எண்ணிக்கை குறைந்திருக்கின்றன. நாளாந்தம் இரண்டு வேளை மட்டுமே உணவு என்ற நியதி வலிந்து புகுத்தப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு வேளை உணவும் கூடிய விரைவில் ஒரு வேளையாக மாறுவதற்குரிய நிலைமைகள்

II ஆம் பக்கம் பார்க்க...

**பொருளாதார நெருக்கடிக்குள் நாட்டை வலிந்து தள்ளிச் செல்கின்ற போக்கில் ஆட்சி நடத்துகின்ற ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலக வேண்டும் என இந்த அரசாங்கத்தை ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வந்த 69 லட்ச சிங்கள பௌத்த மக்களின் சார்பில் இரண்டு மாதங்களுக்கு மேலாக நாடெங்கிலும் வீதிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக வேதனைகள் மிகுந்த நிலையில் வரிசைகளில் காத்துக் கிடக்கின்ற மக்கள் நாளும் பொழுதும் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் சபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.**

# சிறுபிள்ளை வேளாண்மை கதிரின்றி வீடுவந்தது!







> தொழிலுக்குச் செல்ல வசதியில்லை. உணவுப் பொருட்களை வாங்குவதற்கு வழியில்லை. கையில் இருக்கின்ற சில பொருட்களைக் கொண்டு சமையல் செய்வதற்கும் எரிபொருள் இல்லாத நிலை. மின்சாரத் துண்டிப்பும் ஒரு பக்கத்தில் நெருக்கடியை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே எரிபொருள் வரிசைகளில் பொறுமை இழந்து முட்டி மோதுகின்றார்கள். கைகலப்பில் ஈடுபடவும் நேர்ந்து விடுகின்றது. எரிபொருள் பற்றாக்குறையினாலேயே மக்கள் வீதிக்கு வந்து பொறுமை இழக்கும் நிலையில் நீண்ட நேரமாக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றார்கள்.

உருவாகி வருவதாக ஆட்சியாளர்களே ஆரூடம் கூறத் தொடங்கி இருக்கின்றார்கள்.

தொழிலுக்குச் செல்ல வசதியில்லை. உணவுப் பொருட்களை வாங்குவதற்கு வழியில்லை. கையில் இருக்கின்ற சில பொருட்களைக் கொண்டு சமையல் செய்வதற்கும் எரிபொருள் இல்லாத நிலை. மின்சாரத் துண்டிப்பும் ஒரு பக்கத்தில் நெருக்கடியை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாகவே எரிபொருள் வரிசைகளில் பொறுமை இழந்து முட்டி மோதுகின்றார்கள். கைகலப்பில் ஈடுபடவும் நேர்ந்து விடுகின்றது. எரிபொருள் பற்றாக்குறையினாலேயே மக்கள் வீதிக்கு வந்து பொறுமை இழக்கும் நிலையில் நீண்ட நேரமாக நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றார்கள்.

பசி, தாகம், உளரீதியான தாக்கம் என்பவற்றில் பொறுமையின் எல்லைக்கே சென்றுள்ள அந்த மக்களையே தமது கடமைக்கு இடையூறு விளைவித்தார்கள் எனக்கூறி பொலிசாரும் இராணுவத்தினரும் அவர்கள் மீது பெடுபிடிகளைப் பிரயோகிக்கின்றார்கள். சமயங்கள்ணில் அவர்களைத் தாக்குகின்றார்கள். துப்பாக்கிச்சூட்டையும் நடத்துகின்றார்கள். இவ்வாறு திரும்பிய பக்கமெல்லாம் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள மக்கள் பெரும் உளவியல் நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றார்கள்.

இந்த நிலையில், பொறுப்புணர்வோடு மக்களின் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிவகைகளில் செயற்பட வேண்டிய ஆட்சியாளர்கள் பற்றாக்குறைகளைப் போக்க முடியாமல்; கையாலாகாத நிலையில் நாட்டை முடக்குவதற்கே நடவடிக்கை எடுத்துள்ளார்கள். எரிபொருள் பற்றாக்குறை காரணமாக தலைநகரப் பாடசாலைகளை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ள அரசு ஊர்ப்புறங்களில் உள்ள பாடசாலைகளை நீங்கள் நடத்தினாலும் சரி என்ன செய்தாலும் சரி என்று அந்தந்தப் பிரதேச அதிகாரிகளின் தீர்மானத்திற்கே விட்டுவிட்டார்கள். இதுதான் ஜனாதிபதி கோத்தாபாயவின்'தோல்வி அடையாத ஆட்சியின்' இலட்சணம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் தீர்த்துக் கொள்ள முடியும் என்று ஆட்சியாளர்கள் பெரும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். நெருக்கடிகளுக்குள் சிக்கி, வாழ்வுக்கே வழியின்றி அல்லாடிக் கொண்டிருக்கின்ற மக்களுக்கும் இந்த நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு அவர்கள் முற்பட்டிருக்கின்றனர்.

## பிடிவாதப் போக்கும் அலன் கீனனின் எச்சரிக்கைக் குரலும்

மறு சீரமைக்கப்பட்ட உறுதியான கடன் மீளளிப்புக்கான நிதிச் செயற்பாட்டு வழிமுறை, மக்களின் நம்பிக்கையைக் கொண்டுள்ள ஆட்சி நிர்வாகம், பொறுப்புக் கூறுகின்ற வல்லமையைக் கொண்ட ஜனநாயக



ஆட்சி முறை ஆகிய மூன்று நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் உதவி கிடைக்கும் என்பது அந்த சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாடு, ஆனால் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம்; அதற்கு நேர்மாறான நிலைமையையே கொண்டிருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிக்குள் நாட்டை வலிந்து தள்ளிச் செல்கின்ற போக்கில் ஆட்சி நடத்துகின்ற ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலக வேண்டும் என இந்த அரசாங்கத்தை ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வந்த 69 லட்ச சிங்கள பௌத்த மக்களின் சார்பில் இரண்டு மாதங்களுக்கு மேலாக நாடெங்கிலும் வீதிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக வேதனைகள் மிகுந்த நிலையில் வரிசைகளில் காத்துக் கிடக்கின்ற மக்கள் நாளும் பொழுதும் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் சபித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் தோல்வியுற்ற ஜனாதிபதியாக ஒரு போதும் பதவியில் இருந்து விலகிச் செல்ல மாட்டேன். அறுபத்தொன்பது லட்;சம் மக்களால் நேரடியாகத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பெருமைக்குரிய தான் பதவிக்காலம் முடியும் வரையில் பதவி விலகப் போவதில்லை என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ள ஜனாதிபதி அந்தப் பதவியில் பிடிவாதமாக ஒட்டிக்கொண்டிருக்கின்றார்.

இந்த நிலையில் நாட்டையும் மக்களையும் பொருளாதாரப் பேரிடருக்குள் தள்ளிய ராஜபக்ஷக்களை அரசியல் ரீதியாகப் பிணை எடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் 'நெருக்கடிக்கால உதவிகள்' வழியேற்படுத்தி விடக் கூடாது என்று சர்வதேச அளவில் குரல் எழுப்பப்பட்டிருக்கின்றது.

நெருக்கடிக்கான சர்வதேச குழுவைச் சேர்ந்த அலன் கீனன் இது குறித்து தனது கரிசனையை சர்வதேச நாணய நிதியத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வெளியிட்டிருக்கின்றார். கோத்தாபாய ராஜபக்ஷவும், ராஜபக்ஷ குடும்பத்தினரும் அதிகாரத்தில் தொங்கிக் கொண்டிருப்பார்களேயானால், நெருக்கடிகளைத் தணிப்பதற்கான சர்வதேச கடப்பாட்டை நிறைவேற்றுவதற்காக இலங்கை மேற்கொள்ளப்பட வேண்டிய மக்களுடைய ஆதரவைப் பெற முடியாத வலிமிகுந்த நடவடிக்கைகளினால் அமைதி இழந்து சீற்றத்துக்கு உள்ளாகின்ற மக்கள் கூட்டத்தையே அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருப்பார்கள் என அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இத்தகைய ஒரு நிலை தொடருமேயானால் அமைதி இழந்து பதட்டமும், பதகளிப்பும் நிறைந்த ஓர் அரசியல் சூழமைவிலேயே மக்கள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பார்கள் என்ற ஆபத்தை அவர் தனது கூற்றின் மூலம் எச்சரிக்கை செய்திருப்பதைக் காண முடிகின்றது.

ராஜபக்ஷக்களின் தலைவிதியைக் கணக்கில் எடுக்காமல், தற்போதைய நெருக்கடிகளுக்குப் பங்களித்துள்ள அமைப்பு ரீதியிலான பலவீனங்களை நிலைத்திருக்கச் செய்யாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் வகையில், இலங்கையை நெருக்கீடுகளில் இருந்து சர்வதேச ரீதியில் பிணையெடுக்கச் செய்கின்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

எவ்வாறிருப்பினும் சர்வதே நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுகின்ற தகுதியை எட்டுவதற்கு ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இன்னும் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டி உள்ளது என்பதே யதார்த்தம். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளிலும் பேச்சுவார்த்தைகளின் பின்னரும் தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்கள் இனிப்பு முலாம் பூசப்பட்டவையே தவிர, எதிர்பார்க்கின்ற உதவிகள் உடனடியாகக் கிடைக்கும் என்ற உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவன அல்ல என்பதை உணரவுகளின் விளிம்பில் இருக்கின்ற நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஆடுகளம்

# ஆடுகளங்களின் அதிர்வுகள்

இராஜேஸ் மணாளன்



## அபார வெற்றி

மூன்று டெஸ்ட் போட்டிகளையும் வென்று, நியூசிலாந்திடமிருந்து தொடரைக் கைப்பற்றி இருக்கிறது இங்கிலாந்து அணி! புதிதாக அணித் தலைமைப் பொறுப்பேற்று விளையாடிய, பென் ஸ்டோக்ஸ், இதன் மூலம் ஒரு சாதனையாளராகி இருக்கிறார்.

இறுதியாக நடந்து முடிந்த மோதலில், இங்கிலாந்து பந்துவீச்சாளர் ஜாக் லீச் ஆட்ட நாயகன் விருது வென்றார்.. நியூசிலாந்தின் டேரில் மிட்செல், இங்கிலாந்தின் ஜோ ரூட் கூட்டாக , தொடர் நாயகன் விருது வென்றனர்.

இனி இங்கிலாந்து அணி இந்தியாவுடன் மோதவுள்ளது. இந்திய அணியுடனான டெஸ்ட் போட்டியை எதிர்கொள்வது குறித்து இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா – இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5வது டெஸ்ட் போட்டி வரும் ஜூலை 1ம் தேதி நடைபெறவுள்ளது.

5வது டெஸ்ட் கடந்தாண்டு நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 2 – 1 என முன்னிலை பெற்றது. கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஒரே ஒரு போட்டி மட்டும் தற்போது நடைபெறுகிறது. இந்த மோதலை இந்தியா வெல்வது சுலபமாக இருக்கப் போவதில்லை. இங்கிலாந்து அணி புதிய வேகத்துடன் ஆடுவதோடு , பலமாக அணியாகவும் மாறியுள்ளது.

## இலங்கைத் தமிழருக்கு பெருமை



பர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுத் தொடரில், குத்துச்சண்டை பிரிவில் பங்குபெற கிளிநொச்சியைச் சேர்ந்த விட்டாலிஸ் நிக்லஸ்க்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

குத்துச்சண்டை அணியில் தெரிவாகியுள்ள விட்டாலிஸ் நிக்லஸ், தேசியப்போட்டிகளில் வட மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வடமாகாணத்திற்காக பெற்றுக்கொடுத்துள்ளதுடன், இராணுவ அணிக்காக விளையாடி தேசிய அணியில் இடம்பிடித்திருந்தார்.

தற்போது பொதுநலவாய விளையாட்டுத் தொடரில் பங்குபற்றி சாதிப்பதன் மூலம் இலங்கைத் தமிழர் என்ற செய்தியை உலகறிய செய்வதுடன், நாட்டிற்கும், கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்து கொடுப்பதே தனது இலட்சியம் என அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா – பர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள 2022ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டுத் தொடர், எதிர்வரும் ஜூலை மாதம் 28ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 08ஆம் திகதி வரை லண்டனில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பெறும் வீரர்கள் ஒலிம்பிக் தகுதிகாண் போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்புக்களை பெறவுள்ளனர்.



## ஒரு நாள் ஆட்ட அணித் தலைமை

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஷேவாக் அளித்த ஒரு பேட்டியில், ‘ 20 ஓவர் போட்டிக்கான இந்திய அணியின் கேப்டனாக புதிதாக ஒருவரை கொண்டு வர அணி நிர்வாகம் மனதில் நினைத்தால் 35 வயதான ரோகித் சர்மா அந்த பதவியில் இருந்து விலக வேண்டும். அப்படி செய்தால் இந்த வயதில் அவர் தனது பணிச்சுமையையும், மனச்சோர்வையும் நிர்வகிக்க நன்றாக இருக்கும்.

அத்துடன் 20 ஓவர் போட்டிக்கு புதிய கேப்டன் நியமிக்கப்பட்டால், ரோகித் சர்மா நல்ல ஓய்வு எடுத்து கொண்டு புத்துணர்ச்சியுடன் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியை சிறப்பாக வழிநடத்த உதவிகரமாக இருக்கும். மூன்று வடிவிலான இந்திய அணியையும் ஒருவரே வழிநடத்த வேண்டும் என்ற கொள்கையை இந்திய அணி நிர்வாகம் இன்னும் விரும்பினால் அதற்கு ரோகித் சர்மாவே சிறப்பானவர் என்று நான் நம்புகிறேன்.

ஆஸ்திரேலியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடக்க இருக்கும் 20 ஓவர் உலக கோப்பை போட்டிக்கான இந்திய அணியின் பேட்டிங்கில் முதல் 3 வரிசையில் ரோகித் சர்மா, இஷான் கிஷான், லோகேஷ் ராகுல் ஆடினால் நன்றாக இருக்கும். இளம் வேகப்பந்து வீச்சாளர்களில் உம்ரான் மாலிக் பந்து வீச்சுதான் என்னை அதிகம் கவர்ந்ததாகும். அவரது திறமைக்கு மூன்று வடிவிலான இந்திய அணியிலும் நீண்ட காலம் இடம் பெறுவார்’ என்று தெரிவித்தார்

## தொடரைக் கைப்பற்றியது



வங்காளதேசத்திற்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியது வெஸ்ட் இண்டீஸ்! வங்காளதேசத்திற்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. வெற்றியின் மூலம் வெஸ்ட் இண்டீஸ் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2–0 என்ற கணக்கில் கைப்பற்றியது.



## இங்கிலாந்து அணி இதுதான்...

இந்தியாவுடனான மோதலில் விளையாடப் போகும் வீரர்களின் பெயர்கள் வெளியாகியுள்ளன. இந்த அணிக்கு தொடர்ந்து பென் ஸ்டோக்ஸ் தலைமை வகிப்பார். அண்டர்சன், பிராட், ரூட், பேர்ஸ்டோ, ஜாக் லீச் போன்ற முக்கிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

மேலும் கொரோனாவால் இந்த டெஸ்ட் போட்டியிலிருந்து விலகியுள்ள பென் போக்ஸின் பெயரும் கடைசி இடத்தில் இடம்பெற்றுள்ளது. இருப்பினும், மற்றொரு விக்கெட் கீப்பர் சாம் பில்லிங்ஸூம் சேர்க்கப்பட்டுள்ளதால், பில்லிங்ஸ் தான் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.டெஸ்டிற்கு மீண்டும் திரும்பியுள்ள மொயின் அலி சேர்க்கப்படவில்லை.

இங்கிலாந்து அணி விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

பென் ஸ்டோக்ஸ் [கேப்டன்], ஜேம்ஸ் ஆண்டர்சன், ஸ்டூவர்ட் பிராட், ஜோ ரூட், ஜானி பேர்ஸ்டோ, ஜாக் லீச், அலேக்ஸ் லீஸ், கிரேயக் ஓவர்டன், ஜிம்மி ஓவர்டன், சாம் பில்லிங்ஸ், மேத்யூ போட்ஸ், ஹேரி ப்ரூக்ஸ், ஒல்லி போப், ஜாக் கிரௌலி, பென் போக்ஸ்.

## இதுதான் இந்திய அணி

இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. ரோஹித் ஷர்மா தலைமையிலான அணியில் கே.எல். ராகுல், விராட் கோலி, புஜாரா, பும்ரா, அஸ்வின், ஜடேஜா போன்ற சீனியர் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இந்நிலையில் காயம் காரணமாக துணைக் கேப்டன் கே.எல்.ராகுல் விலகியுள்ளார். மேலும் ரோஹித் ஷர்மாவுக்கு கொரோனா உறுதியாகியுள்ளதால், டெஸ்டில் பங்கேற்க வாய்ப்பில்லை எனக் கூறப்படுகிறது

## ஒரு நட்சத்திர வீரர் ஓய்வு பெறுகிறார்

2019 உலக கோப்பையை வென்ற 35 வயதே ஆகும் இங்கிலாந்து வீரர் இயன் மோர்கன், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதை, கடந்த செவ்வாயன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அயர்லாந்தை சேர்ந்த இயன் மோர்கன் அயர்லாந்து அணியில் அறிமுகமாகி பின்னர் இங்கிலாந்துக்காக ஆடி வருகிறார். 2015இல் அப்போதைய இங்கிலாந்து கேப்டன் அலெஸ்டர் குக்கிற்கு பின் கேப்டன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்



2015 உலக கோப்பை தோல்விக்கு பின்னரே, 2019 உலக கோப்பையை மனதில் கொண்டு, இடைப்பட்ட 4 ஆண்டுகளில் வலுவான அணியை கட்டமைத்தார் இயன் மோர்கன்

2015 உலக கோப்பையில் படுதோல்வி அடைந்து தொடரை விட்டு வெளியேறிய இங்கிலாந்து அணியை, அதன்பின்னர் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் அச்சமற்ற கிரிக்கெட் ஆடி அசாத்திய ஸ்கோர்களை அடிக்கவல்ல மற்றும் எதிரணிகளை அடித்து துவம்சம் செய்து வெற்றிகளை வசப்படுத்தக்கூடிய வலுவான அணியாக கட்டமைத்தார் இயன் மோர்கன்.

பட்லர், பேர்ஸ்டோ, ராய் ஆகிய வீரர்களுடன் தானும் அதிரடியாக பேட்டிங் ஆடி, 400 என்ற ஸ்கோரை ஒருநாள் கிரிக்கெட்டில் சர்வ சாதாரணமாக்கியவர் இயன் மோர்கன். பெரும் எதிர்பார்ப்புடன் 2019 உலக கோப்பையில் களமிறங்கிய இயன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணி இறுதிப்போட்டியில், நியூசிலாந்தை வீழ்த்தியது. இதன்மூலம், இங்கிலாந்து அணியின் பல்லாண்டு கால உலக கோப்பை கனவை நனவாக்கினார் மோர்கன்.

சர்வதேச கிரிக்கெட்டில் மோர்கன் 126 போட்டிகள் தலைமை தாங்கி 76 போட்டிகளில் வென்று இங்கிலாந்தின் சிறந்த வெள்ளைப்பந்து கேப்டனாகத் திகழ்கிறார். 248 ஒருநாள் போட்டிகளில் 7701 ரன்களையும் 115 டி20 போட்டிகளில் 2,458 ரன்களையும் எடுத்துள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 2 சதம், ஒருநாள் போட்டிகளில் 14 சதம், 47 அரைசதம், டி20-யில் 14 அரைச்சதம் அடித்துள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக ஜாஸ் பட்லர் கேப்டனாக்கப்படலாம் என்று தெரிகிறது.



# வீணாகும் நேரத்தில் வெண்டி நடுவோம்!



## உழுதுண்டு வாழ்வோம்

எமக்கான உணவில் தன்னிறைவு

**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தனிநபர்களை ஊக்குவிக்கும் முகமாக வீட்டுத்தோட்டப்பயிர்களை நடுவதற்கான ஆலோசனைகளை இந்தப்பக்கம் விதைத்து செல்கிறது.**

### வெண்டி நடவு முறை

#### நட செய்யும் இடத்தை தேர்வு செய்து அதை தயார் செய்தல்:

★ வெண்டைக்கு நல்ல சூரிய வெளிச்சம் தேவை. எனவே அப்படி ஒரு இடத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள்.

★ வெண்டை எல்லா விதமான மண்ணிலும் நன்றாக வளரும். என்றாலும் நன்கு வடிய கூடிய மண்ணில் வளர்ப்பது நல்லது.

★அமிலத்தன்மை நிறைய இருக்கும் மண் கலவை இதற்கு நல்லது. அமிலத்தன்மை pH: 6–6.8 வரை இருத்தல் நல்லது.

★அமிலத்தன்மை சரியான அளவு இல்லையென்றாலும் பரவாயில்லை. நம் வெண்டை தான் நன்றாக ஒத்துழைக்க கூடியதாயிற்றே. என்ன வளர்ச்சியில் தான் கொஞ்சம் மாற்றம் இருக்கும்.

★இடத்தை தேர்ந்தெடுத்த பின்னர், அதனை நன்றாக கொத்தி விட்டு எருவும் மட்கும் உரமும் இட்டு கலந்து நீரிட்டு விதைப்பிற்கு இரண்டு நாளிற்கு முன்னர் நிலத்தை தயார் செய்து கொள்ளுங்கள்.

### எப்போது வெண்டையை நடலாம்?

★ வெண்டைக்கு நல்ல இதமான சூரிய ஒளி இருக்க கூடிய சூழல் தேவை. எனவே இதனை ஜனவரியிலும், ஜூனிலும் நடவு செய்யலாம்.

### விதைகளிலிருந்து வெண்டையை வளர்ப்பது எப்படி?

★வெறும் நீரில் இரவு முழுதும் ஊற வைத்து அதையும் நடவு செய்து கொள்ளலாம்.

★ இப்படிசெய்வதால் விதைகளின் முளைப்பு தன்மை அதிகரிப்பதுடன், முளைக்கும் செடிகளும் நல்ல வீரியமுடன் வளர்வதற்கும் உதவும்.

★நடுதல்: விதைகளை 1–2 அடி இடைவெளியில் 1–1/2 அங்குலம் அளவு சிறு குழியில் போட்டு மண்ணை மூடி விடுங்கள்.

★ வெண்டை உயரமாக வளரும். அதனால், நிலத்தில் விதைக்கும் போது ஒவ்வொரு வரிசையும் 3–4 அடி இடைவெளியில் நடுங்கள்.

★ நீங்கள் ஒரே இடத்தில் நிறைய விதைகளை விதைத்திருந்தீர்களானால் எல்லாம் ஒரே இடத்தில் முளைக்கும். அப்போது நல்ல ஆரோக்கியமான நாற்றை மட்டும் விட்டு வைத்து மற்றவற்றை கிள்ளிவிடுங்கள்.

★ நேரடியாக கன்றுகளை வாங்கி நடுவதாய் இருந்தால் 1–2 அடி இடைவெளி விட்டு நடவு செய்யுங்கள்

### வெண்டையை தொட்டிகளில் வளர்ப்பது எப்படி:

வெண்டையை நிலத்தில் வளர்ப்பது எவ்வளவு எளிதானதோ, தொட்டிகளில் வளர்ப்பதும் அவ்வளவு எளிதானது தான். என்ன தொட்டியிலிருப்பதால் அதற்கு ஊட்டசத்து குறையாமல் கொஞ்சம் அதிக அக்கறை எடுக்க வேண்டும். மண் நல்ல வளமாகவும் நன்கு வடிய கூடியதுமாய் இருப்பது மிக முக்கியம். இதை தவிர, மற்ற அனைத்து நடைமுறைகளும் நிலத்தில் வளர்ப்பதை போன்றது தான்.

### நீர் ஊற்றுதல்:

★ வெண்டைக்கு நிறைய தண்ணீர் தேவையில்லை. ஆனால், இவற்றுக்கு மண் மட்டும் லேசாக ஈரமாக இருக்க வேண்டும். எனவே ஈரப்பதமாக எப்போதும் வைத்திருப்பது அவசியம்.

★ அதே நேரத்தில் நிறைய நீரை ஊற்றி தண்ணீர் தேங்க வைத்து விடுவதையும் தவிர்க்க வேண்டும்.

★ நீர் ஊற்றும் போது இலைகளில் படாமல் அடி பாகத்தில் ஊற்றுவது பூஞ்சை தொற்றுகளை தடுக்க உதவும். அது மட்டுமல்லாமல் இலைகள் மேல் நீர் துளிகள் வெய்யிலில் பூத கண்ணாடி போன்று செயல் பட்டு இலையை சுட்டு பாதித்து விடும்.

★ அதே போல் காலையில் நீர் ஊற்றுங்கள். அப்படி செய்வது மாலைக்குள் இலைகளில் நீர் பட்டிருந்தாலும் அவை காய்ந்து விட உதவும்.

### உரமிடுதல்:

இவை எல்லா வகையான மண்ணிலும் வளரும் தான், ஆனால் ஒரு சத்துமில்லாத மண்ணிலிருந்து எவ்வளவு தான் காய்காய்க்க முடியும்? எனவே உரமிடுதல் மிகவும் முக்கியம்.

★ எரு மற்றும் மட்கும் உரங்கள் இடலாம்

★ மண்புழு உரமிடலாம்

★ பஞ்சகாவியம், அமிர்த கரைசல், மீனமிலம், அல்லது எந்த ஆர்கானிக் ஊட்டசத்தை வேண்டுமானாலும் இடலாம்

எதை இட்டாலும் மாதத்திற்கு இரு முறை தொடர்ந்து இடுவது தான் நல்ல பலனை தரும்.

### பூ பூத்தல்:



செடி முளைத்து 35–40 நாட்களில் பூ பூக்க துவங்கும். பூக்கள் மஞ்சள் நிறத்தில் செம்பருத்தியை போலவே மிக அழகாக இருக்கும்.

### காய் தள்ளுதல்:

பூ பூத்து 5 நாட்களில் காய்கள் வளர துவங்கும். அது துவங்கி 2 மாதங்களுக்கு தொடர்ந்து காய்த்துக்கொண்டே இருக்கும்.

### அறுவடை:

சந்தைக்கு சென்று வெண்டைக்காய் வாங்கினவர்களுக்கு தெரியும் சிறந்த வெண்டை முற்றாத வெண்டை தான் என்று. முற்றிய பின்னர் அவற்றின் குழகுழப்பு தன்மை அதிகரிப்பதுடன், உண்னவும் ஏற்றதாக இருப்பதில்லை.

எனவே காய்களை சரியான சமயத்தில் அறுவடை செய்வது மிக முக்கியம். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை என தொடர்ந்து அறுவடை செய்யலாம். ஒரு வெண்டை செடி தன் வாழ் நாட்களில் 30 வெண்டைகாய்கள் வரை கொடுக்கும். ஆனால் இது நீங்கள் அதை எப்படி பார்த்துக்கொள்ளுகிறீர்கள் என்பதை பொறுத்து தான் இருக்கிறது.

### நோய் மற்றும் பூச்சி தாக்கம்:

நான் பார்த்த வரையில் வெண்டையில் தோன்றுவதில் மாவுப்பூச்சி, அசுவினி பூச்சி, பச்சை புழுக்கள் தான் மிக முக்கியமானவை. இவற்றை வேப்பெண்ணெய் மற்றும் வேப்பங்கொட்டை கரைசல் ஆகியவற்றை வாரம் இரு முறை தெளிப்பதன் மூலம் தடுக்கலாம்.

நீங்கள் பூச்சிகளை காணாவிட்டாலும் இவற்றை தொடர்ந்து தெளித்து வாருங்கள். எப்போது இவை வருமென்றே தெரியாது.

நோயை பொறுத்த வரையில் வேர் அழுகல், வேர் தொற்றுகள், இலை சுருட்டல், மற்றும் இலை பழுப்பாதல் தான் முக்கியமான நோய்கள்.

பாஸ்போபாக்டீரியா மற்றும் சூடோமோனாஸ் இரண்டையும் நீரில் கலந்து செடியின் துவக்க காலத்திலிருந்து மண்ணில் தொடர்ந்து தெளித்து வாருங்கள். இது வேர் சம்பந்தமான நோய்களிலிருந்து செடியை பாதுகாக்கும்.

இலை தொடர்பான பிரச்சனைகளுக்கு செடியை நன்கு செழிப்பாக வைத்துக்கொள்வது தான் மிகவும் உதவும்.

### வெண்டையை அறுவடை செய்வது எப்படி?

★ செடி நட்டு 2 மாதத்தில் முதல் அறுவடைக்கு அது தயாராகி விடும்

★ வெண்டைக்காயை 2–4 அங்குலமாய் இருக்கும் போதே அறுவடை செய்து விடுங்கள்.


★ வெண்டையை கத்தியை வைத்து வெட்டி எடுப்பது நல்லது

### வெண்டையை எப்படி சேகரித்து வைப்பது:

வெண்டையை சேமித்து வைக்க வெட்டப்படாத வெண்டைக்காய்களை ஃபிரீசர் பைகளில் போட்டு சேமித்து வைத்துக்கொள்ளலாம்.

இந்த பதிவு உங்களுக்கு பயனுள்ளதாக இருந்திருக்கும் என நம்புகிறோம். இந்த பதிவு உங்களுக்கு பிடித்திருந்தால், உங்கள் சுற்றத்திற்கு இதை பகிர்ந்து ஆர்கானிக் பசுமை அன்பை பரப்பலாமே!


ஒன்றாய் விதைப்போம்! ஒன்றாய் வளர்வோம்!


















# தமிழ்த் திரை இசைப் பாடல்களை ஆட்சி செய்யும் சங்க இலக்கியங்களும் இலக்கிய நயங்களை இசையாக்கி இனிமையூட்டும் தமிழ்த் திரையிசைப்பாடல்களும்










**தமிழ்**

**தமிழ்த்** திரைப்படம் என்னும் ஊடகம் இளையோர் முதல் பெரியோர் வரை ஆதிக்கம் செலுத்தி அவர்களைத் தனியொரு உலகிற்குள் அழைத்துச் சென்று வித்தை காட்டுகின்றது. சிலருக்கு திரைப்படத்தின் கதையோட்டம் பிடிக்கின்றது. சிலருக்கு பாடல் வரிகள், இசை, குரல், கதாநாயகன், கதாநாயகி ஆகியோரைப் பிடித்துப் போகின்றது. வேறு சிலருக்கு பாடல் வரிகளை இயற்றும் கவிஞர்களின் தமிழ் இலக்கிய புலமை மீதான அவா எழுந்து உள்ளத்தை உருக்குகின்றது. இரசனைகள் ஆளுக்காள் வேறுபடுவதுதானே. தமிழ்த் திரையிசைப் பாடல்களைப் பொறுத்தவரை பழைய பாடல்கள், இடைக்கால பாடல்கள், புதிய பாடல்கள் என வகைப்படுத்தி இசையோடு கலந்த பாடல் வரிகளின் நயங்களை சுவைப்போரும் உள்ளனர். பெரும்பான்மையாக பாடல் வரிகளுக்குள் கவனத்தை உள்நுழைப்பவர்கள் இலக்கிய தாகம் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.


சங்க இலக்கியங்கள் என்று அறியப்படும் பதினெண் மேற்கணக்கு நூல்கள் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) பழந்தமிழரின் காதல், வீரம், கொடை, போர் என அவர்தம் வாழ்வியலை இயற்கையோடு இணைத்துப் பாடிய தன்மை வாய்ந்தன. அக வாழ்வில் தலைவன் – தலைவி காதல், பிரிவு, ஊடல், தவிப்பு எனக் காதல் உணர்வின் மெய்ப்பாடுகளை மிக மென்மையாகத் தீட்டிக்காட்டும் பண்பு இவற்றின் தனிச்சிறப்பு. இத்தகைய தன்மை வாய்ந்த சங்க இலக்கியங்களில் வரும் அகப்பாடல்களைத் தமிழ்த் திரைப்படப்பாடல்களில் பல கவிஞர்கள் தமது பாடல்களுக்கு மென்மேலும் வலுசேர்க்க பயன் + படுத்தியுள்ளனர். வணிக நோக்கத்திற்காக தமிழ் திரைப்படங்களும் சரி தமிழ்த் திரையிசைப்பாடல்களும் சரி தரம் குறைந்து சென்றாலும் விரல்விட்டு எண்ணக்கூடிய பாடல்களின் மூலம் தமிழ்ச் சுவையும் காதல் அழகும் பொங்கி ததும்புகின்றதை இத்தகைய கவிஞர்களின் பாடல்களிலும் அவதானிக்கமுடிகின்றது.

குறுந்தொகை என்ற சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் திணைப்பாடல் ஒன்றில் தலைவன் தலைவியை நோக்கி,

**யாயும் ஞாயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும்**
**எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்**
**செம்புலப் பெயனீர் போல**

அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே என்று கூறுகின்றான். இந்தக் கவிதையின் கருத்து யாதெனில் என் தாயும் உன் தாயும் யார் யாரோ. என் தந்தையும் உன் தந்தையும் எவ்வகையில் உறவினர்கள். நானும் நீயும் எப்படி ஒருவருக்கு ஒருவர் உறவினர் ஆகினோம். செம்மண் நிலத்தில் மழை பெய்யும்போது நீரும் மண்ணும் இணைந்து பிரிக்கமுடியாததாகி ஒன்றோடொன்று கலந்து இருப்பதை போல நமது அன்பான நெஞ்சங்களும் பிரிக்கமுடியாமல் கலந்துவிட்டன




என்பதாகும். இந்த அழகான காதல் கவிதையைக் காலத்திற்கு காலம் தமிழ் திரைப்பட்பாடல்களை எழுதிய கவிஞர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

**வெள்ளை ரோஜா திரைப்படம்**
**(1983 இல் வெளிவந்தது)**

கவிஞர் முத்துலிங்கத்தால் எழுதப்பட்ட சோலைப் பூவில் மாலைத் தென்றல் பாடும் நேரம் என்னும் பாடலில் சென்னில மேடில் தண்ணீர் சேர்ந்தது போலே ஆனது நெஞ்சம் என்ற பாடல்



வரிகள் வருகின்றன. இது செம்புல பெயனீர் போல அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே என்ற குறுந்தொகை கவிதை வரிகளை ஒத்ததாக இருக்கின்றது.

**இருவர் திரைப்படம்**
**(1997இல் வெளிவந்தது)**

கவிஞர் வைரமுத்துவால் எழுதப்பட்ட நறுமுகையே நறுமுகையே நீயொரு நாழிகை நில்லாய் என்னும் பாடலில் அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில் என்ற புறநானூறு பாடல் வரியின் தாக்கமும் யாயும் யாயும் யாராகியரோனென்று நேர்ந்ததென்ன

**யானும் நீயும் எவ்வழியறிதும்**
**உறவு சேர்ந்ததென்ன**
**செம்புலம் சேர்ந்த நீர்த்துளி போல்**
**அன்புடை**

நெஞ்சம் கலந்ததென்ன என்று குறுந்தொகை பாடலை அடியொற்றி இப்பாடலும் எழுதப்பட்டுள்ளது.

**சில்லுனு ஒரு காதல்**
**(2006 இல் வெளிவந்தது)**

கவிஞர் வாலியால் எழுதப்பட்ட முன்பே வா என் அன்பே வா என்னும் பாடலில் நீரும் செம்புல சேறும் கலந்தது போலே கலந்தவர் நாம் என்று யாயும் ஞாயும் என்ற குறுந்தொகை பாடலை அடியொற்றி இப்பாடலும் எழுதப்பட்டுள்ளது.


**சிறைச்சாலை திரைப்படம்**
**(1996 இல் வெளிவந்தது)**

கவிஞர் வாலி அவர்களினால் எழுதப்பட்ட ஆலோலம் கிளி தோப்பிலே தங்கிடும் கிளி தங்கமே

15 ஆம் பக்கம் பார்க்க...

# தமிழ்த் திரை இசைப் பாடல்களை ஆட்சி செய்யும் சங்க இலக்கியங்களும் இலக்கிய நயங்களை இசையாக்கி இனிமையூட்டும் தமிழ்த் திரையிசைப்பாடல்களும்





என்னும் பாடலில் சங்க இலக்கியப் பாடல்கள் எதுவும் இடம்பெறவில்லையாயினும் காதல் உணர்வுகளை செம்மையாக வடித்த சங்கப் பனுவல்களைப் பற்றிய பாடல் வரிகள் இடம்பெறுகின்றன. இப்பாடலில்,

**ஆசை அகத்திணையா?**
**வார்த்தை கலித்தொகையா?**

அன்பே நீ வா வா புதுக் காதல் குறுந்தொகையா? என்று ஒருவரின் காதல் வாழ்வை உள்ளடக்கும் அகத்திணைப் பற்றியும் கலித்தொகை, குறுந்தொகை பற்றியும் இப்பாடல் சொல்கின்றது. இந்த இலக்கியங்களின் வழி காதல் உணர்வுகளை சுவைக்கமுடியும். அதை உணர்ந்த கவிஞர் ஆசை அகத்திணையா? என்றும் வார்த்தை



கலித்தொகையா? என்றும் அன்பே நீ புதுக் காதல் குறுந்தொகையா? என்றும் தலைவனை நோக்கி தலைவி அழைக்கின்றாள், இப்பாடலில். குறுந்தொகை என்னும் சங்க இலக்கியத்தில் தலைவன் – தலைவி உணர்வுகள் பரந்து விரிந்து இருப்பது போல தன் காதலனிடமும் காதல் சுவை இருப்பதாக என்னும் காதலி அவனை புது காதல் குறுந்தொகையா என்று மறைமுமாக கேட்கின்றாள்.

**குறுந்தொகை பாடல் ஒன்றில்**
**தோழி கூற்றாக வரும்**
**கருங்கால் வேங்கை வீயுகு**
**துறுகல்**
**இரும்புலிக் குருளையின்**
**தோன்றுங் காட்டிடை**
**எல்லி வருநர் களவிற்கு**
**நல்லை யல்லை நெடு**
**வெண்ணிலவே**

என்னும் பாடலானது, நீண்ட நேரம் எறியும் வெண்ணிலவே! கரிய அடிப்பக்கத்தையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் உதிர்ந்த பாறை, பெரிய புலிக்குட்டியைப் போலக் காட்சி அளிக்கும் காட்டில் இரவு நேரத்தில் வரும் தலைவருடைய




களவொழுக்கத்திற்கு நீ நன்மை புரியவில்லை என்று பொருள் உரைக்கின்றது. இந்தச் சங்க செய்யுளில் வரும் நல்லை அல்லை என்பது நன்மை தருவதாய் இல்லை என்ற கருத்தைத் தருகின்றது. இந்த நல்லை அல்லை என்ற குறுந்தொகை பாடல் வரியின் தாக்கம் தமிழ்த் திரையிசைப்பாடல் ஒன்றில் வந்துள்ளது.

**காற்று வெளியிடை**
**தமிழ்த் திரைப்படம்**
**(2017 இல் வெளியானது)**

கவிஞர் வைரமுத்து எழுதிய



வானில் தேடி நின்றேன் ஆழி நீ அடைந்தாய் என்ற பாடலில் நல்லை அல்லை நல்லை அல்லை, நன்னிலவே நீ நல்லை அல்லை என்ற சங்க இலக்கிய கவி வரியின் தாக்கம் வந்துள்ளதை காணமுடிகின்றது. சங்க கவிதையில் நல்லை அல்லை நெடுவெண்ணிலவே என்று புலவர் பாடியதை கவிஞர் வாலி நன்னிலவே நீ நல்லை அல்லை என்று பாடியுள்ளார். ஆனால் சங்க இலக்கியத்தின் தாக்கம் வைரமுத்துவின் பல தமிழ்த் திரைப்படப்பாடல்களில் வந்துள்ளதை நாம் மறுக்க முடியாது.

மிகவும் சுவை வாய்ந்த பாடல் வரிகள் சங்க இலக்கியத்தோடு இணைந்து மனதை ஈர்த்து காதல் உணர்வுகளை இலக்கிய ரசனையோடு பாய்ச்சுவதை மேற்படி பாடல்களினூடாக காணலாம். இன்றைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் கலையம்சத்தோடு பொருந்திய ரசனைப்பாங்கான திரைப்படங்களையோ காட்சியமைப்புகளையோ பாடல் வரிகளையோ சுவைக்கமுடியாத நிலையுள்ளது.

வணிகத்திற்காகவும் இளையோர்களின் உணர்ச்சிளைத் தூண்டி திரைப்படங்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கும் பல இயக்குநர்கள் முன்வருவதனால் குடும்ப அங்கத்தவர்களோடு இணைந்து ஒரு பாடலைக்கூட ரசிக்கமுடியவில்லை.

எனினும் இலக்கியத் தரம் வாய்ந்த சில தமிழ்த் திரையிசைப் பாடல்கள் இலக்கிய அறிவு படைத்த கவிஞர்களால் கற்பனை வளத்தோடும் சொற்களின் லாவகத்தோடும் ரசிகர்கள் செவிகளுக்குள் ஊடுருவி உலா வருவதும் மகிழ்ச்சியளிக்கின்றது.




இத்திங்களின் இன்னுமொரு பக்கம்

விடைபெறுகிறது ஜூன்...

# ஜூன் மாதத்தின் முக்கிய சர்வதேச தினங்கள்




ஜூன் 01
உலக பால் தினம்




ஜூன் 03
உலக மிதிவண்டி தினம்

ஜூன் 13
சர்வதேச வெளிறல் விழிப்புணர்வு தினம்

ஜூன் - 04
நிதியியல் கல்வி வாரம்
வன் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அப்பாவிக் குழந்தைகள் சர்வதேச தினம்


ஜூன் 11
பசுமை மிசோரம் தினம்




ஜூன் 12
குழந்தை தொழிலாளருக்கு எதிரான தினம்




ஜூன் 05
உலக சுற்றுச்சூழல் தினம்




ஜூன் 08
உலக மூளைக்கட்டி தினம்




ஜூன் 14
உலக இரத்த தான தினம்

ஜூன் 15
உலக முதியோர் அவமதிப்பு விழிப்புணர்வு தினம்

ஜூன் 16
வெளிநாட்டில் வாழ்பவர்கள் தங்கள் குடும்பங்களுக்கு பணம் அனுப்புதல் தினம்

ஜூன் 18
நீடித்த அறுசுவை உணவு தினம்

ஜூன் 19
உலக அரிவாள் உயிரணு தினம்




ஜூன் 20
உலக அகதிகள் தினம்

ஜூன் 27
நுண்ணிய, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தினம்


ஜூன் 29
தேசிய புள்ளியியல் தினம்
சர்வதேச வெப்ப மண்டல தினம்




ஜூன் 17
உலக தந்தைகள் தினம்
பாலை வனமாகக்கள் மற்றும் வறட்சியை எதிர்த்து போராடுவதற்கான தினம்

ஜூன் 30
சர்வதேச குறுங்கோள் தினம்
சர்வதேச பாராளுமன்றவாதிகள் தினம்




ஜூன் 21
உலக நீர்நிலைகள் தினம்
சர்வதேச யோகா தினம்
உலக இசை தினம்

ஜூன் 23
சர்வதேச விதவைகள் தினம்
ஐக்கிய நாடுகள் பொதுப்பணி தினம்
ஒலிம்பிக் தினம்
மாலுமிகள் தினம்

ஜூன் 26
போதைப் பொருளுக்கு எதிரான சர்வதேச தினம்
சித்திரவதைக்கு உள்ளானவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சர்வதேச தினம்

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கடந்து போன சூறாவளியும் கண்திறந்த சுடலை ஞானமும்....

என ஓடத்தொடங்கியுள்ளார்கள். இதன்படி இன்னும் மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் எரிபொருள் வரப்போவதில்லை. அடுத்து வரும் வாரங்களில் இலங்கை முழுமையாக முடங்குவதும், அத்தியவசியப் பொருட்களின் விலை உச்சத்துக்குச் செல்வதும் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இந்தியாவுக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்ட மூன்று திட்டங்கள் இன்னும் செயற்படுத்தப்படாமல் உள்ளன.

முதலாவது மன்னார் – பூநகரி காற்றாலை மின்சக்தித் திட்டம். இது இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

இரண்டாவது – இரண்டாவது கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையம். இதுவும் அதானி நிறுவனத்துக்கே வழங்கப்பட்டது.

மூன்றாவது – திருமலை சம்பூரில் சூரிய சக்தி மின்திட்டம். இதுவும் இந்தியாவின் மற்றொரு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

இவற்றைவிட திருமலையிலுள்ள எண்ணெய்த் தாங்கிகளை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தம் ஒன்றும் கடந்த ஜனவரியில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இந்திய கடனுவதியுடனான இரண்டு எரிபொருள் கப்பல்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கொழும்புக்கு வந்திருந்தன. அவைதான் இந்தியக் கடனுதவியுடனான இறுதிக்கப்பல்கள். இதற்கு மேலாக கடனை எதிர்பார்க்காதீர்கள் என்பதுதான் இந்தியத்தூதுக்குழு தெரிவித்துச்சென்ற செய்தி!

இந்திய உயர்குழு கொழும்பு வருவதற்கு முதல் நாள் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதர் ரணில் விக்கிரமசிங்க முக்கியமான ஒரு தகவலை வெளியிட்டிருந்தார். ʽஇந்திய உடனுதவித் திட்டத்தின் அடிப்படையில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாவிடமிருந்து இலங்கை பெற்றிருக்கின்றது. இந்தியாவிடமிருந்து மேலும் கடனுதவிகளை நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால், இந்த வகையில் தொடர்ந்தும் எமக்கு ஆதரவளிக்கக்கூடிய நிலையில் இந்தியா இல்லை. அவர்களுடைய உதவிகள் வரையறுக்கப்பட்டவையாக இருந்தாலும், இந்தக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான திட்டம் எம்மிடம் இருக்க வேண்டும். இவை நன்கொடைகள் அல்லʼ என்பதுதான் பிரதமர் தெரிவித்த கருத்து.

இதன் பின்னரும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட, இந்திய பெற்ரோலிய துறை அமைச்சரை புதுடில்லியில் சந்தித்துப்பேசியிருக்கின்றார். ஆனால், அவசரத் தேவைக்கான எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வது குறித்தே இதன்போது முக்கியமாக பேசப்பட்டது. இலங்கை எதிர்பார்க்கும் எரிபொருள் கிடைப்பதற்கு முன்னர் அவசரத் தேவைகளைச் சமாளிப்பதற்கு கையிருப்பில் உள்ள எரிபொருள் போதவில்லை என்றால் இந்திய உதவியைப் பெறுவது தொடர்பாகவே இதன்போது பேசப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியா ஒன்றுதான் அதற்கு உதவக்கூடிய ஒரே அண்டைநாடு. சீனாவைப் பொறுத்தவரையில் மேலும் அதிகளவு கடனுதவிகளை இலங்கைக்கு வழங்கும் நிலையில் இல்லை.

இந்த சந்தர்ப்பத்தை இலங்கை மீதான தனது பிடியை இறுக்குவதற்கு இந்தியா பயன்படுத்துகின்றது. வடக்குடனான தொடர்பை அதிகரிப்பதன் மூலமாக இதனைச் செய்வதுதான் சீனாவின் திட்டம். அதற்காகத்தான் இலங்கை அரசாங்கம் நிரந்தரமாக மூடுவதற்கு திட்டமிட்டிருந்த பலாலி விமான நிலையத்தை திறக்கச் செய்வதில் இந்தியா வெற்றிபெற்றது. அடுத்ததாக காங்கேசன்முறை, மன்னார் துறைமுகங்களிலிருந்து இந்தியாவின் காரைக்கால், தூத்துக்குடி போன்ற துறைமுகங்களுக்கு கப்பல் சேவை ஆரம்பமாகவுள்ளது.


அதேவேளையில், மன்னார்–பூநகரி காற்றாலை மின்திட்டம், சம்பூர் மின்சாரத் திட்டம், கொழும்பு துறைமுக மேற்கு முனையம் என்பவற்றையும் உடனடியாக ஆரம்பிக்க இந்தியா திட்டமிடுகின்றது. அதற்கான காய்நகர்த்தல்களே இப்போது முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், சிங்களவர்கள் மத்தியில் காணப்படும் இந்திய எதிர்ப்பு என்பதைப் பயன்படுத்துவதற்கு ஜே.வி.பி. உட்பட எதிரணிகள் சில தயாராகவுள்ளன. அடுத்துவரும் வாரங்களில் அதனையும் பார்க்கக்கூடியதாக இருக்கலாம்.

# இன்று நினைவில் நிழலாடும் தமிழ்ச் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன்


'இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும், இன்னது சொல்லக்கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர் நோக்கிக் பாக்கவும் கூசுகிறோம். அதனால் தான் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக்களறியையும், மனக் குரூபங்களையும், விகற்பங்களையும் உண்டாக்க இடம் இருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போய் விடப்போகிறது? இற்றுப்போனது எப்படிப் பாது காத்தாலும் நிற்கப்போகிறதா?

மேலும் இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், ஸினிமா நடிகை சீத்தம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம் – இத்யாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்தரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை.'என்று கூறியவர் புதுமைப்பித்தன்.




புதுமைப்பித்தன் சிறுகதைகள்
(Puthumaipithan Stories)





**நான்கு தசாப்தங்களில்**
**சொ. விருத்தாசலத்தின் பேனா**
**படைத்த புதுமைகள் பல. புதுமை**
**யின் பித்தன் வாழ்ந்த நூற்றாண்டில்**
**நாமும் வாழ்ந்தோம்**
**என்ற கர்வம் கொள்வோம்.**
**மாயங்கள் செய்த**
**பேனாவின் பயணம்.**
**(1906.04.25-1948.06.30)**

புதுமைப்பித்தன் என்றவுடன் தமிழ் இலக்கிய உலகு திரும்பிப்பார்ப்பது அவரது சிறுகதைகளையே. மணிக்கொடி இதழின் மூலம் அறிமுகமாகி கலைமகள், ஜோதி, சுந்திர சங்கு, ஊழியன், தமிழ் மணி முதலிய பல பத்திரிகைகளிலும் இவர் சிறுகதைகளைப் படைத்துள்ளார். இன்று தமிழ் கற்பிக்கப்படும் பல்கலைக்கழக தமிழ்த்துறைகளிலெல்லாம் தமது சிறுகதைகள் மூலம் வாழ்ந்து கொண்டு இருக்கும் படைப்பாளிகளில் இவரும் ஒருவர். சொ. விருத்தாசலம் என்ற இயற்பெயர் கொண்ட இவர் புதுமைப்பித்தன் என்ற புனைபெயரில் பல படைப்புக்களை எழுதியுள்ளார். 1906 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாள் திருப்பாதிரிபுலியூரில் பிறந்த இவர் கலைத்துறை இளமாணிப்பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





புதுமைப்பித்தன் எழுத்துலகில் வாழ்ந்த 1933 –1948 வரையான காலப்பகுதி தமிழ்ச்சமூக வாழ்வில் வேரூன்றி இருந்த அழுக்குகளையெல்லாம் வேரறுத்த காலம் என்று தான் கூற வேண்டும்.


பொன்னகரம், சாபவிமோசனம், அன்று இரவு, கயிற்றரவு, வாடாமல்லி, இது மிஷின் யுகம், ஆண்மை, மனித யந்திரம், தெரு விளக்கு, செல்லம்மாள், கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும், ஒரு நாள் கழிந்தது, படபடப்பு, கல்யாணி, மாயவலை என 100 இற்கும் அதிகமான சிறுகதைகளை படைத்துள்ளார். புதுமைப்பித்தன் வாழ்ந்த திருநெல்வேலி, சென்னை ஆகிய பிரதேசங்களைச் சார்ந்த பேச்சு வழக்கே இவரது சிறுகதைகளுக்கும் உயிர் தந்தது. வறுமை, காதல், தனிமனித உணர்வு, பேய், பிசாசு, கடவுள் என்று தன் சிறுகதைகளில் கருப்பொருளை பல்வேறு நோக்கில் விரித்து படைப்பாக்கினார்.

இவையிவை தான் மரபு, இப்படிதான் நாம் வாழ வேண்டும், கற்பை பெண்கள் மீறிடவேக் கூடாது என்று கட்டிக்காத்த முட்டாள் சாம்ராஜ்யத்தை பொன்னகரம் என்ற சிறுகதையில் உடைத்துக்காட்டினார் புதுமைப்பித்தன். பொன்னகரத்தில் வாழ்பவர்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவிப்பவர்கள். அது வேறு உலகம். அதன் தர்மமும் வேறு என்று இந்த நகரத்தை அறிமுகம் செய்கின்றார். இந்தச் சிறுகதையில் தன் கணவனின் பாற்கஞ்சி குடிக்கும் ஆசைக்காக தன் உடலை விற்ற அம்மாளுவின் மூலம் தமிழ் வாசகர் நெஞ்சத்தில் ஆணி அடித்து 'என்னமோ கற்பு கற்பு என்று சொன்னீரே ! இதுதானய்யா பொன்னகரம்!' என்று இந்தச் சமூகத்தை கேலி செய்கின்றார். அதன் முடிவையும் வாசகருக்கே உரித்தாக்கி விலகிக்கொள்கின்றார்.

தமிழ்ச்சமூக வாழ்வில் விதவைகளுக்கு மீளமுடியாத சோகத்தை காட்டி பாதாளத்தில் தள்ளி அவர்தம் சாமான்ய ஆசைகளை உணர்ச்சிகளை நெருப்பு போர்வையால் மூடி அவர்களை மரணிக்கும் வரை தீயில் வேக வைத்த கொடூரத்தை வாடாமல்லி சிறுகதை மூலம் மிக யதார்த்தமாக வெளிப்படுத்தியதோடு சரசு என்ற விதவை பெண் வார்ப்பை மறக்கமுடியாத அவளது மரணத்தின் மூலம் இந்தக் கேடுகெட்ட சமூக வழக்கங்களை கீறிகாட்டியுள்ளார்.




வைதிக வாழ்க்கை நெறியில் பெண்கள் மிகவும் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டமையை வழி, ஆண்மை, கல்யாணி ஆகிய சிறுகதைகளிலும் மிக யதார்த்தமாக புதுமைப்பித்தன் வெளிப்படுத்தியுள்ளார். வழி சிறுகதையில் வரும் அலமி என்னும் விதவைப் பெண் வசதியோடு வாழ்ந்தபோதும் தனது கணவனில்லாததாலும் கணவனோடு மகிழ்ச்சியாக வாழும் இன்னும் ஒரு பெண்ணைப்பார்த்தும் ஏங்கி தவிக்கிறாள். மறுமணம் மறுக்கப்பட்டு உணர்ச்சிகளை கல்லாக்கி தவிக்கும் அவளது உணர்வுகளைப் புரியாத தகப்பனோடு வாய் மூடி அமைதி காத்து உள்ளூர அழுது தவிக்கிறாள். இப்படி ஒரு தருணத்தில் வாழும் அவளுக்கு ஒரு தடவை கட்டிலில் படுத்து அழும் போது சாவி கொத்திலிருந்த சாவி ஒன்று அவளது நெஞ்சைப் பதம் பார்த்து ரத்தம் பீறிட்டு வரவே, மகளின் அறையில் வெளிச்சம் இன்னும் அணைக்கப்படவில்லை என்று தந்தை வந்து பார்த்து துடிக்கவே பதிலுக்கு இவள் 'நெஞ்சின் பாரம் போக சின்ன வாசல்....மூச்சு விடும் வழியை அடைக்க வேண்டாம்... இந்த ரத்தத்தை அந்த பிரம்மாவின் மூஞ்சியில் பூசி விடுங்கோ...' என்கிறாள். இவ்விடத்தில் புதுமைப்பித்தன் அந்த விதவையின் உள்ளக்கொதிப்பை நாசுக்காக சொல்லி வைதவ்ய சமூக வழக்கங்களையும் மரபுகளையும் நாசூக்காக கேலி செய்கின்றார்.


1906 - 1948
புதுமைப் பித்தன்,

புதுமைப்பித்தனுக்கு மேலைநாட்டு கலாசாரங்களிலிருந்த ஈடுபாடு, தமிழ்ச் சமூக வாழ்வில் இருந்த பெண் அடக்குமுறைகளை விமர்சிக்க சிறுகதை துணையாக இருந்ததாகவே நோக்க வேண்டியிருக்கின்றது.

புராணக்கதைகளைக்கூட தன் கைக்குள் எடுத்துக் கொண்டு அதனை தனக்கு பிடித்த மாதிரி இந்தத் தமிழ்ச் சமூக வாழ்வின் இழிநிலைகளை கேள்விக்குள்ளாக்க விரும்பி 'சாபவிமோசனம்' என்ற சிறுகதையை எழுதினார். சாபம் வாங்கிய அகல்யை என்னும் பாத்திரம் பின்னர் சாபம் நீங்கி தன் கணவனோடு வாழ்ந்ததை சுருக்கமாக ராமாயணம் சொல்லிப் போகவே இன்றைய சமூக வாழ்வில் கற்புக் கெட்ட பெண்கள் எப்படியெல்லாம் வஞ்சிக்கப்படுகின்றனர் என்பதை அகல்யை, சீதை ஆகிய இரு பெண் பாத்திரங்களைக் கொண்டு மிக நீண்ட சிறுகதையைப் புதுமைப்பித்தன் படைத்துள்ளார். உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே இலக்கியத்தின் நாயகர்கள் என்று இருந்த காலம் சென்று தாழ்ந்த, ஒடுக்கப்பட்ட மக்களும் இலக்கியத்தின் கதாநாயகர்களே என்பதை புதுமைப்பித்தனும் தனது படைப்புகளில் வெளிப்படுத்த தவறவில்லை.

புதுமைப்பித்தனைப் பற்றியும் அவரது படைப்புகள் பற்றியும் விமர்சிப்பதற்கு தனியொரு இயல் வேண்டும். இன்று 30.06.2022. தமிழ்ச் சிறுகதை சாம்ராஜ்யத்தின் மன்னனான இவரின் நினைவு நாளில் அவரது ஓரிரு சிறுகதைகளைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டியது காலத்தின் தேவையாகவே இருக்கின்றது.


சி.ரஞ்சிதா



# சிரிக்க... சிந்திக்க...

கடந்து போக....







